விலை ரூபா: 15.00
...istered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு
Valampurii

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை (28.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

# முன்னாள் புலிப்போராளிகள் விடயத்தில் சர்வதேச சட்டத்தை மீறுகிறது இலங்கை


## நீதவான்கள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

(ஜெனிவா)

**இலங்கையில் முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற முறை சர்வதேச சட்டம் மற்றும் தரவுகளை ஒத்திருக்கவில்லை என ஜெனிவாவிலிருந்து இயங்கும் சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.**

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் விவகாரத்தில் இலங்கை சர்வதேச சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளதாக சர்வதேச நீதவான்களின் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் எந்தவிதமாக குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பாரியளவு கைதிகளை இவ்வாறு தடுத்து வைத்துள்ள நாடாக சில (18ஆம் பக்கம் பார்க்க)

வல்லையில் தடம்புரண்ட லொறி



## மாவிட்டபுரத்தில் குண்டு வெடிப்பு இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது குண்டு வெடித்ததில் இராணுவச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. வீதியின் அருகே இராணுவச் சிப்பாய்கள் இணைந்து துப்புரவுப் பணியில் (18ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம், கீரிமலை பகுதிகளில் இடம்பெறும் சுண்ணக்கல் அகழ்வை தடுத்து நிறுத்த அமைச்சர் பசில் நடவடிக்கை எடுப்பார்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் சுண்ணக்கல் அகற்றப்படுவது தொடர்பில் ஆராய்ந்து அதனைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகைதரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொள்ளவுள்ளார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தகவல் தருகையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்.

இவ் விஜயத்தின் போது காலை 9.00 மணிக்கு வயாவிளான் (18ஆம் பக்கம் பார்க்க)

## வல்லையில் லொறி குடைசாய்ந்தது தப்பிப்பதற்காக பாய்ந்த சாரதி லொறியுள் நசியுண்டு பலியானார்

(யாழ்ப்பாணம்)

மணற்காடு பிரதேசத்தில் மணல் ஏற்றுவதற்காக சென்ற லொறி வல்லைப் பாலத்திற்கு அண்மையாக குடைசாய்ந்ததில் சாரதி நசியுண்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சுன்னாகம் தெற்கைச் (18ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு சென்ற தேர்தல் ஆணையாளர் நீண்ட விடுமுறையின் பின் நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நீண்ட விடுமுறையின் பின்னர் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வார இறுதியில் தேர்தல் ஆணையாளர் இலங்கைக்கு திரும்பவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொதுத் தேர்தல்களின் பின்னர் தேர்தல் ஆணையாளர் ஓய்வெடுப்பதற்காக வெளிநாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக நேர்முகத் தேர்வுகளை தேர்தல் ஆணையாளர் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (18ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி விவகார வழக்கு பொன்சேகா ஆஜராகாததால் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சென்ற புலிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக வெளியான சம்பவம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலி (18ஆம் பக்கம் பார்க்க)

## தலைமைப்பதவியிலிருந்து விலகுமாறு ரணிலிடம் கட்சி உறுப்பினர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என அந்தக் கட்சியின் காலி மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப் பட வேண்டும் என ஆலோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் கட்சியின் தலைவர் களிடம் ஒப்படைத்துள்ளனர்.

எதிர்க்கட்சித்தலைவர் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு வேறு ஒருவருக்கு தலைமைத்து (18ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் தாமதமாகும்!



### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றம் தாமதமாகும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் கண்ணி வெடி அகற்றப்பட்டதற்கான உறுதிச்சான்றிதழ் வழங்கப்படாமையே இதற்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் தேடும் பணி நேற்றும் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள குளத்தினுள் படையினரால் மேற்கொள்ளப்படும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் பணி தொடர்வதாக பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

குளத்தின் ஒரு பகுதியூடாக கற்கள் நிரப்பப்பட்டு அதனூடாக நிலத்தை தோண்டுவதற்கு இயந்திரம் (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நவோதயா வார நிகழ்வுகளை கல்லூரி அதிபர் சி.சிவகணேசசுந்தரன் ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் இறுதிநாள் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# அமைச்சர் பசிலுக்கு எதிராக தேரர் சாகும் வரை உண்ணாவிரதம்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிரதி பிரதம சங்க நாயக்கரும் மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம ரஜமகா விகாரையின் விகாராதிபதியுமான அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டக்களப்பு நகரில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைத்தான் சந்திப்பதற்கு முற்படுகையில் ஏனைய அமைச்சர்கள், ஊடகவியலாளர்கள், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் தன்னை விரட்டியதாகவும்இவ்வாறு அமைச்சர் தன்னை அவமானப்படுத்தியதைக் கண்டித்தே இந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்திருப்பதாகவும் சுமணரத்ன தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மங்களா ராம விகாரைக்கு முன்னால் இப்போராட்டம் தொடர்கிறது. அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேரடியாக வந்து தன்னிடம் மன்னிப்புக் கோரும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் தொடருமென அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## நூல் வெளியீட்டு விழா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா வெளியீடான மகாஜனன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட தமிழ்த் துறை பேராசிரியர் கலாநிதி கி.விசாகரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-3)

## பெறுபேற்று அறிக்கையை சமர்ப்பிக்க வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட் பாடசாலைகளில் தங்கள் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்று அறிக்கையினை இன்று யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## புலமைப் பரிசில் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ர.அகிலா (157), சி.பாணுஜா(155), க.சர்மினி (154), வ.டிலானி (153), இ.வதுசனா (149), த.சங்கவி (148), சி.கயூரன்(147), கு.துவாரகன் (147), அ.நவோமியா (145), ப.ஜெரோன் (143).

**கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி.**

இ.ஷிந்துயன் (181-மாவட்ட நிலை 06), ச.தனுஷிகா (154), க.யதுகுலன் (150), யு.அஜந்தன் (149), சி.விதுஷன் (146), ஜெ.பிரதீபன் (143). (ச)


**அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல் பரீட்சைக்கான விசேட கருத்தரங்குகள்**

* உயர் கலைக் கல்லூரி-மீசாலைச் சந்தி, செவ், வியாழன் 2.45-5.00 மணி.
* சுப்றா-சித்தன்கேணி புதனிலிருந்து ஒவ்வொரு நாளும் மாலை 5.30-7.30 வரை.
* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு. (யாழ். போதனா வைத்தியசாலை எதிரே) புதன், சனி, ஞாயிறு 1.00-5.00வரை.

இப் பரீட்சைக்கான தவசேகர் ஆசிரியரின் வழிகாட்டல் நூலை வகுப்புக்களிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் ரூபாய் 150 க்கு பெற்றுக் கொள்ளமுடியும். (C-1303)

செல்லா சினிமா 09.09.2010 முதல்



மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்திய இலங்கை ஏரேதின வெளியீடு

வந்தே மாதரம்

அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஹென்றி அரவிந்த்.T.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# கேள்விப் பத்திரம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகக் கட்டிடங்கள் அமைத்தல், வேலி அமைத்தல், மலசலகூடம் திருத்தல், சுற்றுலா விடுதி திருத்தம் போன்ற வேலைகளுக்கு கேள்விப் பத்திரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வவுனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளத்தில் அமைந்துள்ள சபையின் 10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மாதிரிப் பண்ணைக்கு சுற்றிவர வேலி அமைத்தல்.
02. மேற்படி பண்ணையில் 20' x 30' அளவுடைய கட்டிடம் அமைத்தல்.
03. கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய அலுவலகக் கட்டிடத்தை புனருத்தாரணம் செய்தல்.
04. யாழ்ப்பாணம் தலைமை அலுவலக மலசலகூடம் திருத்தம், சுற்றுலா விடுதி திருத்தம் செய்தல்.

மேற்படி வேலைகள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் 06.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் வந்து பெற்று, 15.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை. (C-1300)


# இசையமைப்பாளர் சந்திரபோஸ் காலமானார்



(சென்னை)

இசையமைப்பாளர் சந்திரபோஸ் (வயது-55) சென்னையில் நேற்றுக் காலமானார். கல்ஈரல் பாதிப்புக் காரணமாக அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது உடல் நிலை மோசமடைந்த நிலையில் நேற்று மாலை அவர் காலமானார். தமிழ் சினிமாவில் 350ற்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்தவர் சந்திரபோஸ்.

1977 இல் தொடங்கிய இவரது இசை சாம்பிராஜ்ஜியம் தொடர்ந்து 20 வருடங்களுக்கும் மேலாக நிலைத்தது.

ரஜனி நடித்த மனிதன், ராஜா சின்ன ரோஜா உள்ளிட்ட ஏ.வி.எம்மின் தயாரிப்பில் வந்த 12 படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.

ஊர்க் காவலன், விடுதலை, அண்ணா நகர் முதல்தெரு, மாநகர காவல், சங்கர்குரு, வசந்தி, பாட்டி சொல்லைத் தட்டாதே, புதிய பார்வை, தொட்டில்சபதம், மக்கள் என் பக்கம் உட்பட பல வெற்றிப் படங்களுக்கு இசை அமைத்து முன்னணி இசையமைப்பாளராக இருந்தார்.

வண்டிக்காரன் சொந்த ஊரு மதுரை, டில்லிக்கு ராஜான்னாலும் பாட்டி சொல்ல தட்டாதே, வானத்தைப் பார்த்தேன் பூமியைப் பார்த்தேன், ரவிவர்மன் எழுதாத கலையோ, சின்னச்சின்னப் பூவே நீ கண்ணால் பாரு போதும் என்பன போன்ற ஏராளமான ஹிட் பாடல்களைத் தந்திருக்கின்றார்.

சமீபத்தில் மெட்டிஒலி, சித்திக் தயாரித்த மலர்கள் தொடரில் லிங்கம் என்ற வில்லன் கதாபத்திரத்தில் தனது நடிப்பால் இரசிகர்களைப் பயமுறுத்தவும் செய்தார்.

மனிதன் படத்தில் வாழும்போது செத்துப் செத்துப் பிழைப்பவன் மனிதானா வாழ்ந்த பின்னும் பேரை நாட்டி நிலைப்பவன் மனிதனா என்று வரும் வரிகள் மிக ஆழமான கருத்துடையது.

இந்தப் பாடல் வரிகளுக்கு இசையமைத்த சந்திரபோஸ் இரசிகர்களின் கண்ணீர் அஞ்சலி மூலம் அவர் அந்த வரிகளுக்கு அர்த்தப் படுத்தியிருக்கின்றார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவகற்கைகள் வணிக பீடத்தின் முதலாவது பேராசிரியராக இளம் வயதில் பதவியுயர்வு பெற்றுள்ள

கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி



அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் இளம் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்ற இவர், வணிகமாணி, முதுதத்துவமாணி, முதுகலைமாணி (தமிழ்) பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தினை சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் சுமார் 40 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும், 10இற்கும் மேற்பட்ட நூல்களையும் வெளியீடு செய்து இப் பீடத்தில் தனித்துவமாக விளங்குபவர். உள்நாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றினதும் உயர் நிலைப்பட்டங்களுக்கான வெளிநிலைத் தேர்வாளர்களில் ஒருவராகவும் ஆய்வு நெறியாளராகவும் எமது சபையின் பரீட்சைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வருபவர்.பேராசிரியருடைய பணி மேலும் சிறப்புற அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

த.பரராஜசிங்கம்(JP)
செயலாளர்
காமாட்சி அம்பாள் இந்துபரிபாலனசபை
நீர்வேலி.

(சி-1302)

# இன்று ஒரு தகவல்

## காகம்

யாராவது திரும்பத் திரும்ப சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் ''ஏண்டா இப்படி காக்கா மாதிரி கத்துகிறாய்?'' என்று சொல்வதுண்டு.

அப்படிச் சொல்பவரும் சத்தம் போட்டுத் தான் சொல்லுவார்.

இப்படிக் கத்துபவர்களுக்கெல்லாம் அறிவில்லை என்று சொல்லமுடியாது.

ஏனென்றால் 'பறவை இனத்திலேயே அதிக அறிவுள்ளது காக்கை தான்' என்று விலங்கியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும். ஏனெனில் காகத்தைப் போய் 'காக்கா' பிடிக்கவேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கில்லை.

காக்கை இனத்தில் 32 வகை உண்டாம். உலகம் முழுவதும் காக்கைகள் பரவியிருக்கின்றன.

முக்கியமாக நாம் 5 வகையான காக்கை இனங்களைப் பார்க்கலாம்.

அதில் இரண்டு வகையை 'அண்டங்காக்கை' என்று சொல்கிறோம். மற்ற மூன்று வகையை வெறுமனே காக்கைகள் என்று சொல்கிறோம்.

எல்லாக் காக்கைகளுமே கறுப்பு நிறமாகத்தான் இருக்கும்.

காகத்தின் நீளம் சுமாராக 16 அங்குலத்தில் இருந்து 20 அங்குலம் வரைக்கும் இருக்கும்.

அண்டங்காக்கையின் நீளம் 26 அங்குலம் வரைக்கும் இருக்கும்.

சாதாரண காகமெல்லாம் மனிதர்கள் வாழும் பகுதிகளிலேயே வசிக்கும்.

அண்டங்காக்கைக்கு அறிவு அதிகம். கறுப்பாக இருந்தாலும் பளபளப்பாக இருக்கும். சின்ன வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தாலும் கிளி மாதிரி திருப்பிச் சொல்லும்.

உலகத்துக்கு முதன்முதலில் "நோவாவின் படகில்" இருந்து அனுப்பப்பட்ட பறவை அண்டங்காக்கை தான் என்று பைபிள் சொல்கிறது.

காடுகளிலும் மலைகளிலும் இது அதிகமாக வசிக்கும். இது தன்னுடைய கூட்டை உயரமான மரம்-பாறை உச்சி என்பவற்றில் தான் கட்டும்.

ஒரு பெண் காகம் மூன்றிலிருந்து எட்டு முட்டைகள் வரைக்கும் இடும்.

இந்த முட்டைகள் இலேசான பச்சை நிறமாக இருக்கும்.

அதன் மேல் சிறிய புள்ளிகளும் இருக்கும். பெண்களின் கூந்தலுக்கு நம்து கவிஞர்கள் மேகத்தின் நிறத்தை ஒப்பிடுவது வழக்கம்.

மேல் நாட்டுக் கவிஞர்கள் எல்லாம் காகத்தின் நிறத்தை ஒப்பிடுவது வழக்கம்.

அதுவும் அண்டங்காக்கையின் நிறத்தைத்தான் கூந்தலுக்கு உவமையாக சொல்கிறார்கள்.

காகத்தையெல்லாம் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பெண்களுடன் ஒப்பிட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாகி விடும்.

"நீ மயில் மாதிரி இருக்கிறாய்" என்றால் சந்தோஷப்படுவார்கள்.

''நீ காக்கை மாதிரி இருக்கிறாய்'' என்றால் சண்டைக்கு வந்துவிடுவார்கள்.

அதனால் உவமை சொல்லும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

தாவரங்களை அழிக்கக்கூடிய பூச்சிகளை காகம் உண்பதால் -அது நமக்கும் உதவி செய்கிறது.

உலகம் முழுவதும் காகம் இருக்கிறது.

ஆனால் நியூசிலாந்தில் மட்டும் இல்லையாம்.

காக்காவைப்பற்றி இவ்வளவு சொல்லியாச்சு.

'காக்கா' பிடிக்கிறது எப்படி?

வேணாங்க!

நமக்கெல்லாம் தெரிந்த விடயத்தைப் பற்றி நான் திரும்பவும் சொல்லிக்கொண்டிருந்தால் அது நன்றாக இருக்காது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் 22 இனங்களைச் சேர்ந்த ஈரூடக வாழிகள் அழிவடைந்துள்ளன

## உயிர் பல்வகைமைத்துவ செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 22 இனங்களைச் சேர்ந்த ஈரூடக வாழ் உயிர்கள் அழிவடைந்துள்ளதாக உயிர் பல்வகைமைத்துவ செயலகம் தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் ,சுற்றாடல் மாசடைதல் , மனிதர்களின் செயற்பாடுகள் என்பவை காரணமாக இந்த உயிரினங்கள் அழிவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதர்களின் நடவடிக்கைகளால் இந்த உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளமையே இவற்றின் அழிவுக்கான பிரதான காரணம் என குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 104 இனங்களைச் சேர்ந்த ஈரூடக வாழ்வுயிர்கள் காணப்படுவது ஆய்வு களின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள சில தாவரங்களும் ஊர்வன இனங்களும் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் பாரிய சுற்றாடல் பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் உயிர் பல்வகைத்துவ செயலகம் கூறுகிறது.

எலிக்காய்ச்சல் போன்ற நோய்களின் தாக்கம் அதிகரிப்பதற்கும் இதுவே காரணமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாச் சைவமாநாடு

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் ஐம்பது ஆண்டுகாலப் பணிநிறைவை முன்னிட்டு எதிர் வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் சைவப் புலவர் பொன் விழாச் சைவ மாநாடு நடை பெறவுள்ளது.

இம்மாநாட்டுக்குத் தமிழ் நாடு,திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் ,நல்லை ஞானசம்பந் தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மாநாடு காலை, மாலை அமர்வுகளாக நடைபெறும். காலையில் சைவப்புலவர் பட்டமளிப்பும்,சைவநாதம் பொன்மலர் வெளியீடும் சிறப்பு நிகழ்ச்சிகளாக நடை பெறவுள்ளன. மாலை அமர் வில் சைவசமயக் கலைப் போட்டிப் பரிசளிப்பு விழா, சைவநீதி எனும் தலைப்பில் கருத்தரங்கு, கலை விழா என்பன நடைபெறும்.

மாநாட்டில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், கலாநிதி மா.வேதநாதன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கலாநிதி குமார சுவாமி சோமசுந்தரம், கோகிலா மகேந்திரன் முதலான பல சைவ நல்லறிஞர்கள் உரையாற்றவுள்ளனர்.

2009,2010 இல் நடைபெற்ற சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, மலைநாடு, கொழும்பு, வன்னி, ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களைச் சேர்ந்த முப்பத்திரண்டு பேர் பட்டம் பெறவுள்ளனர்.

அத்துடன் யாழ் .பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்ற ஆறு சைவப்புலவர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் எனச் சைவப்புலவர் சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

## பூசா கைதியின் மனு விசாரணைக்கு ஏற்பு

பூசா முகாமில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குடும்பஸ்தரின் அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் இந்த மனு வின் விசாரணை எதிர்வரும் டிசம்பர் 16ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. ஸ்ரீசெல்வன் அன்டன் ஜுட் என்பவரே தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார். (ஸ்ரீ-2)

## இராசி பலன்

*28.09.2010*
*(புரட்டாதி 12,செவ்வாய்க்கிழமை)*
*பஞ்சமி முன்னிரவு 7.26 மணி வரை*
*கார்த்திகை பிற்பகல் 5.49 மணி வரை*
*இராகுகாலம் 3.02 -4.32 மணி வரை*
*சுபநேரம் 10.32 - 12.02 மணி வரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல் வந்து சேரும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சொத்து வாங்க எடுத்த முயற்சி வெற்றிதரும்.

**இடபம்** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, பணம் பற்றிய கவலை தீரும்,அஞ்சல் வழியே ஆச்சர்யமான தகவல் வந்து சேரும்.

**மிதுனம்** ஆறுமுகப்பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு கிட்டும், மாலை நேரம் மகிழ்ச்சியான பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**கடகம்** இலாபம் இரு மடங்காகும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலில் புதிய நண்பர்களின் சந்திப்பு கிட்டும், சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், தூரதேச செய்தி மனதை மகிழ்விக்கும்.

**கன்னி** மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்கங்கள் விலகும்.

**துலாம்** கவலை தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக் கூடிய நிலை உருவாகும், நண்பர்களிடம் விழிப்புணர்ச்சி தேவை.

**விருச்சிகம்** வாய்ப்புக்கள் வாயில் கதவை தட்டும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு** போட்டிகளில் வெற்றி பெற்று புகழ் குவிக்கும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும், கூட்டுத்தொழில் செய்பவர்கள் தனித்தியங்கும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, திருமண முயற்சி வெற்றிபெறும், கட்டடப்பணியில் ஈடுபாடு அதி0.கரிக்கும்.

**கும்பம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், கடிதம் நல்ல தகவலைத் தரும், நண்பர்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்** முத்தான வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 70 |
| தக்காளி | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 60 | 60 |
| கரட் | 60 | 80 |
| பூசணி | 40 | 30 |
| புடோல் | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 |
| பயற்றங்காய் | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 |
| பீற்றூட் | 30 | 35 |
| கறிமிளகாய் | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 90 |
| போஞ்சி | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 |





தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்தினால் செயற்திட்ட கைநூல் மற்றும் தென்மராட்சி கிழக்கு முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 306 B1இன் ஆளுநர் லயன் எஸ்.ஜெயவக்சலன் கழகச் செயலாளர் லயன் கே.நடராசாவுக்கு செயற்திட்ட கைநூல் வழங்குவதையும் அருகில் கழகத்தலைவர் லயன் எஸ்.தேவகுமாார் நிற்பதையும் பிராந்திய செயலாளர் லயன் என்.பிறேமராசா மிருசுவில் முன்பள்ளி ஆசிரியரிடம் கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் அருகில் லயன் ஆளுநர் வலயத் தலைவர் லயன் பி.செல்லத்துரை, பிராந்திய தலைவர் லயன் ஏ. சபாநாதன், கழகத் தலைவர் லயன் எஸ்.தேவகுமார் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## குண்டூசி விழுங்கிய மாணவன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

குண்டூசி விழுங்கிய மாணவர் ஒருவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யா/ஊரெழு கணேசா வித்தியாலயத்தினைச் சேர்ந்த தரம் 10 இல் கல்விகற்கும் ஜீ.வேணுகன் எனும் மாணவன் சிறுவர் தினத்தினை ஒட்டிய அட்டையினை தனது சட்டையில் ஏற்றுவதற்கு எடுத்த குண்டூசியினை வாயினில் வைத்த வேளையிலேயே தவறுதலாக விழுங்கியுள்ளார்.

குறித்த மாணவன் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாவனையாளர் அதிகார சபை மற்றும் யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ஆம்திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயல கத்தில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் தொடர்பாக தெரியவருவ்தாவது, பாவனையாளர் அதிகார சபையினர் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் மீது பல்வேறு .குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை இத்தகைய குற்றங்கள் தொடர்பாக தமக்கு முன்னறிவித்தல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என வர்த்தகர்கள் பாரம்பரியம் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் யாழ்.அரச அதிபரிடம் தெரிவித்ததன் பிரகாரம் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது என யாழ்.பாவனையாளர் அதிகாரசபை தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா கலைப்போட்டி முடிவுகள்

(யாழப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கலைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொன் விழா மாநாட்டில் நடத்தப்படவுள்ளதாகவும் மாணவர்களை தயார் நிலையில் இருக்குமாறு சங்க செயலாளர் செ. கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார்.

பெயர் விபரம் வருமாறு,

**பேச்சு**

க.பிரகான்(யா/யூனியன் கல்லூரி), இ. சாயினி (யா/அச்சுவேலி திரேசா கல்லூரி), அ.உதயமாலினி(யா/நயினை ஸ்ரீ கணேச மகாவித்தி).

**பஞ்சபுராணம்**

யோ.சிந்துயா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), அ.அகன்யா(யா/யூனியன் கல்லூரி), ஜெ.தேவரூபா(யா/ இராமநாதன் கல்லூரி)

**கதாப்பிரசங்கம்**

ஸ்ரீ.பிரதீஸ்வரன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), ம.பிரதீபன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), க.சயீவ்(யா/வட்டு மத்திய கல்லூரி)

**சைவசித்தாந்த அறிவுப் போட்டி**

செ.சேந்தன் (யா/ யாழ்.இந்துக் கல்லூரி), பா.சுஜீபா( யா/ இராமநாதன் கல்லூரி), க.மோகனஜெனனி (யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

**வில்லுப்பாட்டு**

யா/இணுவில் இந்துக்கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி

**அபிநயம்**

ந.மாதுஷா (யா/ யூனியன் கல்லூரி)

**இசைநடனம்**

செ.சசிகலா, சு.நிஷாந்தினி, வே.கம்சானந்தி, பு.றொசாந்தினி (யா/வட்டு இந்துக் கல்லூரி). (ஸ்ரீ-4)




## உணவுப்பொருள் அல்லாத பொருட்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

வன்னி நிலப்பரப்பில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி பிரதேசங்களில் வசித்துவரும் குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் அல்லாத பொருட்கள் சேவாலங்கா நிறுவனத்தினரால் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

இதில் ஆரம்பகாலங்களில் மேற்படி உதவிப் பொருட்கள் பெறாத குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-29)

## மென்பந்து சுற்றுப்போட்டி ஆரம்ப நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அமைப்புகளுக்கிடையே நடத்தப்படவுள்ள மென்பந்து சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாவுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வில் கைதடி நவசக்தி விளையாட்டுக் கழகமும், நுணாவில் பாரதி விளையாட்டுக் கழகமும் இணைந்து மோதவுள்ளதாக லயன்ஸ் கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-29)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் புரட்டாதி மாத மலர் வெளிவந்துள்ளது.

இம்மலர் விபூதிக் கலாசாரம், தமிழும் மெய்ந்நெறியும் பழந்தமிழ் இலக்கியங்கள், சிறுவர் கதைகள், சிவபுராணம் ஆகிய ஆன்மீக கட்டுரைகளும் தினம் தினம்..., படங்கள் தரும்..., அப்பர் தேவாரத்துள்..., தர்ப்பைப் புல்லின்..., பெரியபுராணத்தின்..., கர்மமும்..., திருவிளையாடல்..., 97 ஆம் அகவையில்..., இறைவனை... தமிழகத் திருக்கோயில் ஆகிய தொடர் ஆன்மீகக் கட்டுரைகளும் உள்ளடங்கலாக வெளிவந்துள்ளது. (ஸ்ரீ-4)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஒக்ரோபர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணம் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி செல்வி சி.சிவராணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மக்கள் களரி நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

மக்கள் களரி நாடக ஆற்றுகை நிகழ்வில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான 'திருடன் வந்தான்' நாடகம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)








கல்வி அமைச்சு யுனிசெவ் அனுசரணையுடன் யுனிசெவ் வலய இணைப்பாளர்கள், ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், தெரிவுசெய்யப்பட்ட வளவாளர்களுக்கான பாடசாலை சுயமதிப்பீடு பிள்ளைநேயப் பாடசாலை செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஆசிரியவள நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் அசோகா பண்டிதசேகரா விடயம் தொடர்பாக உரைநிகழ்த்துவதையும் யுனிசெவ் அமைப்பின் கல்வி விசேட அதிகாரி பத்மினி ரணவீர உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிப்பதையும் யுனிசெவ் வலய இணைப்பாளர்கள், ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்ட வளவாளர்கள் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சுப்பிரமணிய பாரதியாருக்கு 'பாரதி' பட்டம் கொடுத்தவர் யாழ்ப்பாணத்தவரா?



புலவர் ம.பார்வதிநாதசிவம்

தற்காலத் தமிழ் மேதைகள் என்ற நூல் அண்மையில் வெளிவந்தது. அந்த நூலில் நூலாசிரியர் இறையடியான் என்பவர் யாழ்ப் பாணத்தவர் ஒருவரே சுப்பிரமணிய பாரதிக் கும் அவரது நண்பராகிய சோமசுந்தரபாரதிக் கும் "பாரதி" பட்டம் கொடுத்ததாக எழுதி இருக்கிறார்.

யாழ்ப்பாணத்துப் பெரியவர் தலயாத்திரை சென்றபோது எட்டயபுரத்தில் சிலநாள்கள் தங்கி இருந்தார். தங்கி இருந்தபோது சிறு வர்களாகிய சுப்பிரமணியபாரதியாரும் சோம சுந்தரபாரதியும் அவர்களுடைய நண்பர்கள் சிலரும் யழ்ப்பாணத்தாரிடம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

சிறுவர்களின் விவேகத்தைக்கண்ட யாழ்ப் பாணத்துப் புலவர் சிறுவர்களிடம் வெண்பா ஈற்றடி ஒன்றைக் கூறி வெண்பாவைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டார். சுப்பிரமணியபாரதி யாரும் சோமசுந்தரபாரதியாரும் மிகச் சிறப் பாக வெண்பா இயற்றிக் காட்டினர். இவர் களின் கவிதைச் சிறப்பைக் கண்ட அவர்கள், இருவருக்கும் "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் சுப்பிரமணியம் சுப்பிரமணிய பாரதியானார். சோமசுந்தரம் சோமசுந்தரபாரதியானார். இதுவே வரலாற்று உண்மை. இந்த உண்மையை எழுதிய இறையடியானின்நேர்மை பாராட்டுக்குரியது.

ஆனால் அதற்குமுன் பாரதியார் வரலாறு எழுதிய பலர் எட்டயபுரம் மன்னரால் சுப்பிர மணியபாரதியாருக்குப் பாரதி பட்டம் வழங்கப் பெற்றது என எழுதியுள்ளனர். அவர்கள் அப் படி எழுதக் காரணம் எட்டயபுரம் மன்னர் வழங் கியது என்று எழுதினால் பட்டத்துக்குத் தனிப் பெருமை கிடைக்கும் என எண்ணியமையே!

இளமையிலேயே பாரதி பட்டம் பெற்ற சுப்பிரமணிய பாரதியார் சாதாரண வாழ்வை விரும்பவில்லை. குறிக்கோளுடன் கூடிய சிறந்த இலட்சிய வாழ்வையே விரும்பினார்.

**தேடிச் சோறு நிதம் தின்று - பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்**
**வாடித்துன்ப மிக உழன்று - பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து - நரை**
**கூடிக்கிழப் பருவம் எய்தி - கொடுங்**
**கூற்றுக் கிரையெனப்பின்மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப்போலே - நான்**
**வீழ்வேனென்று நினைத்தாயோ?**

என்று பாடினார். சோறு தின்பதும் பிறர் குறைகளைப் பற்றிப்பேசுவதும் பிறர்வாடும் செயல்களைச் செய்வதும் நரைதிரை அடை ந்து இறப்பதும் சாதாரணவாழ்வு என்று கூறினார்.

தமது குறிக்கோளுடன் கூடிய இலட்சிய வாழ்வின் பயனாக இருபெரும் பணிகளைத் தேர்ந்தார்.ஒன்று தேசவிடுதலை மற்றது தமிழ்மொழி விடுதலை.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு நாடு உட்பட்டி ருந்த காலத்தில் ஆங்கிலம் கற்றவர்களே பெரியவர்கள் என்ற எண்ணம் பெற்றோர் பலருக்கு ஏற்பட்டது. பிள்ளைகளை ஆங்கிலப் பாடசாலைகளுக்கு அனுப்புவதிற் பெருமை கண்டார்கள். தமிழர் இருவர் சந்திக்கும்போது கூடத் தமிழிற் பேசாது ஆங்கிலத்திற் பேசு வதையே பெருமையாகக் கொண்டார்கள்.

தமிழன் தமிழ் தெரியாதவனுடன் ஆங் கிலத்தில் உரையாடுவது தவறன்று. ஆனால் தமிழன் தமிழனுடன் உரையாடிப் பேருக்கு நாம் தமிழர் என்று கூறுவதை வெறுத்தார். "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந் திடுதல் நன்றோ" எனக்கேட்டார்.

தொல்காப்பியப் பாயிரத்தில் செந்தமிழ் என்னும் சொல் வருகிறது. செம்மை என்ற சொல்லுக்கு அழகு, செப்பம், மேன்மை, தலைமை,தனித்துவம் எனப் பல பொருள் கள் உண்டு. செந்தமிழ் செம்மொழி என்பதை அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச் சித்துறைத் தலைவராக இருந்த, தேவநேயப் பாவாணர் முன்னரே நிறுவியுள்ளார். பாரதி யார் தமிழ்செம்மொழி எனும் பொருள்படும் படியாகத் தம்முடைய பாடல்களிற் பல இடங் களிலும் செந்தமிழ் என்ற சொல்லைப் பயன் படுத்தியுள்ளார்.

தேசவிடுதலையைய்யும் தமிழ்மொழி விடு தலையையும் நேசித்த பாரதியார் தமது குறிக் கோளில் ஒன்றாகிய தேச விடுதலையை இருக்கும்போது பார்க்கவில்லை. ஆனாலும் அவர் மறைவுக்குப்பின் தேச விடுதலை கிடை த்தது. தமிழ்விடுதலை தேச விடுதலை பெற்ற இந்தியாவில் இன்னும் முழுமை பெறவில்லை. பல ஆங்கிலச் சொற்கள் தமிழ்மொழியிற் கலந்து காலப்போக்கில் தமிழ்ச் சொல்லின் இடத்தைப் பிடித்து விடுகின்றன.

பாரதியாரின் தமிழ்பபற்றைத் தமிழ் மக் கள் உணர்ந்து முழுமனத்துடன் செயற்பட் டால் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்க முடியும். தேமதுரத் தமிழோசை உலகமெ லாம் பரவும்வகை செய்தல்கூடும்.

# சிரத்தையுடன் செய்யவேண்டிய பிதிர்க்கடமை மஹாளய சிரார்த்தம்

*24.09.2010 தொடக்கம் 07.10.2010 வரை மஹாளயபட்ச சிரார்த்த காலம்.*

வருடந்தோறும் வரும் ஆவணிமாத அபர பட்சபிரதமை முதல் புரட்டாதிமாத அமாவாசை யுடனான பதினைந்து நாட்கள் சூரிய பகவான் சிங்கராசியிலிருந்து கன்னிக்குப் பிரவேசித் திருக்கும் காலம், மஹாளயபட்ச காலமாகப் பிதிர்க்கடனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுவது நம்முன்னோர்களால் வகுக்கப்பட்ட நியதியாகும்.

மஹாளயபட்ச காலத்தில் வருடந்தோறும் எமது பிதிர்தேவதைகள் பிதிர்லோகத்திலிரு ந்து பூவுலகிற்கு வந்து தத்தம் உறவுகளுடன் சஞ்சரிப்பதாகவும், அப்பொழுது வரும் பிதிர் களை நன்றி உணர்வுடனும்,சிரத்தையுடனும் எம்மாலியன்றளவு உபசரித்து சிரார்த்தம், பிதிர்தர்ப்பணம் என்பன செய்தும்.தானதர் மங்கள் செய்தும் திருப்திப்படும்போது பிதிர் களும்தத்தம்உறவுகளை இவ்வுலகில்நல்வாழ்வு வாழ ஆசிர்வதிப்பதாக ஆன்றோர் வகுத்துள் ளனர்.

எமக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாள். ஆதலால் நாம் மஹாளய சிரார்த்தத் தின்போது ஒருநாள் செய்யும் பிதிர்க்கடன் தின மும் உணவளிப்பதற்கு சமமாகும்.பிதிர்கள் பூவுலகிற்குச் சஞ்சரிக்கும் மஹாளயபட்ச காலத்தில் சிரார்த்தம் செய்ய முடியாதவர்கள் மகாவிஷ்ணுவின் உடம்பிலிருந்து ஏற்பட்ட எள்ளும்,தர்ப்பைப் புல்லும் கொண்டு எள்ளும் தண்ணீரும் இறைக்கும்போது பிதிர்கள் மனங்குளிர்ந்து, தாகந் தீர்ந்து திருப்தியுடன் தம் உறவுகள் சந்ததியினர் பூவுலகில் நல் வாழ்வு வாழ ஆசீர்வதித்துச் செல்வதாக நம் பப்படுகின்றது.

இந்துக்கள் தமது வாழ்க்கையில் கடைப் பிடிக்கவேண்டிய ஐந்து பெரும் வேள்விக ளாக, கடமைகளாக பிதுர்யக்ஞம்,தேவயக்ஞம், பூதயக்ஞம்,மானுஷயக்ஞம்,பிரம்மயக்ஞம் வகுக்கப்பட்டுள்ளன. இதிற் பிதுர்யக்ஞம் சிறந்ததொரு நன்றிக்கடனாகப் போற்றப் படுகின்றது.

இவ்வுலகில் வாழ்வில் நாம் சுபீட்சமுடன் வாழவேண்டுமாயின் பிதிர்க்கடன்களைச் செய்து தேவர்களை ஆராதிக்கவேண்டும். சந்நியாசம் பெற்றவரான ஆதிசங்கரபகவானே தமது தாயாருக்குப் பிதிர்க்கடன் சிரார்த்தம் செய்தமைபற்றிப் புராணங்கள் கூறுகின்றன எனின், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனப்போற்றிடும் யாம் வருடத்தில் ஒருமுறை மஹாளய சிரார்த்த காலத்திலா வது பிதிர்க்கடன் செய்வது அவசியமன்றோ.

சிரத்தையுடனும் நம்பிக்கையாகவும் நன் றியுடனும் செய்யப்படும் எக்காரியமும் எம்மை உய்விக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வருடத்தில் ஒருமுறை புரட்டாதி மாத மஹாளய பட்சகாலத்தில் நம் முன்னோர்கட்கு நன்றிக் கடனாக சிரார்த்தம், தானதர்ம வழிபாடு செய்து நல்வாழ்வு வாழ்வோம்.இயலாதவர்கள் எள் ளும் நீரும் கொண்டு தர்ப்பணம் செய்யலாம். இதுவும் முடியாதவர்கள் பிதிர்களை நன்றி உணர்வுடன் மனத்திருத்தி வழிபாடுகள் தானும் செய்யலாமன்றோ.

**-நீர்வைமணி**



## குறைகேள் அரங்கு

# பொற்றொழிலாளர்களின் அவலம் போக்குங்கள்

இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களில் முக்கிய முதல்மைத் தொழில் ஆபரணத் தொழிலாகும். அது ஆடம்பரத் தொழில்ல - அருங் கலை தெய்வீகக்கலை - மறைமுகமாக மக்களின் உடல் நோய்களை தீர்க்கும் தெய்வீக சக்தி வாய்ந்த தொழில். இத்தொழில் அன்னியர் ஆட்சியில் அரசின் ஆதரவு இன்மையால் அருகி அழிந்து கொண்டிருந்தது. சுதந்திரம் கிடைத் ததும், ஐ.தே.கட்சி ஆட்சியில் கலாநிதி மலல சேகாரா தலைமையில் ஒரு விசாரணை சபையை நிறுவி அழிந்து போகும் நிலையிலிருந்த பாரம்பரிய கைத்தொழில்களைப் பாதுகாத்து அவ்விசாரணை சபையின் சிபார்சின்படி - பொற்றொழிலாளர்கட்கு மானிய அடிப்படையில் தங்க விநியோகத்தை அரசு மேற்கொண்டது. இந்த மானிய அடிப்படை தங்க விநியோகம் 1981ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியால் நிறுத்தப்பட்டது. தந்தவனே பறித்துக் கொண்டான்.

1977ம் ஆண்டு ஐ.தே.கட்சி கொண்டு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கை - இதனால் மடை திறந்த வெள்ளமென படை எடுத்த அன்னிய நாட்டு ஆபரணங்கள் ஒருபக்கம். அன்னிய நாட்டு பொற்றொழிலாளர்களின் வரவு - இயந்திரம் மயம்- தங்கத்தின் விலையேற்றம் போன்ற காரணங்களால் தங்கத் தொழிலாளர்கள் வறுமைத் தொழிலாளர்களானார்கள். யுத்தத்தை காரணம் காட்டி தொழிலாளர் வயிற்றில் முற்றாக அடித்து விட்டது. வட கிழக்கு வாழ் தமிழ் பொற்றொழிலாளர்கள்,வறுமை துரத்த வாழ்வை இழந்து வாடி நிற்கிறார்கள்.

ஆனால் சிங்களப் பொற்றொழிலாளர்கள் அரசின் அணைப்போடு, உதவி யோடு இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டார்கள். தொழில்பெற்று உயர்ந்தார்கள். ஒரே நாட்டில் சிங்களத் தொழிலாளர்கட்கு பாதுகாப்பும் பணமும் தொழில் வாய்ப்பும் கிடைக்கிறது. ஆனால் தமிழ் தொழிலாளர்கட்கு தொழில் பறிப்பு - வறுமை - பட்டினி. ஏனிந்த ஏற்றத் தாழ்வு - ஏனிந்த பாகுபாடு. சிலுவை ஏற்றம். இது ஜனநாயக ஆட்சியின் செங்கோல் சிறப்பா?

ஜனாதிபதி மகிந்த சிந்தனையில் வடகிழக்குப் பொற்றொழிலாளர்களின் வாழ்வில் அபிவிருத்தி இடம்பெறாதது வேதனையாகும். இத்தனைக்கும் இந்த எழில் மிகு சிங்காரபுரியான இலங்கையை வடிவமைத்து தந்தவர் பொற்றொழிலாளர் மூதாதை முன்னோரான விஸ்வகர்மா என இராமாயணம் கூறுகிறது.இந்த நாட்டின் கலைப்படைப்புகளான தம்புள்ள- குகைக்கோயில், சிகிரியா- சித்திரக்குன்றுகளை ஆக்கித்தந்தவர் அவரென மகாவம்சம் கூறு கிறது.

சுருங்கக்கூறின் இந்த நாட்டின் கலை கலாசார உற்பத்தியாளரான ஆபர ணத் தொழிலாளர்கள் - கலை வளர்ப்பாளர். இராணுவத்தைப் பாதுகாப்பது போல அருங்கலைப் படைப்பாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உண்டு. இந்தவகையில் இரத்தினக்கல் கூட்டுஸ் தாபனத்தின் கிளைகளை வடகிழக்கு மாகாணங்களுக்கு விஸ்தரித்து துயர் படும் படைப்பாளரான பொற்றொழிலாளரரின் துயர்துடைக்க அரசும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**பூ.ம.செல்லத்துரை ஜே.பி (தலைவர்)**

**சி.பாக்கியராஜ் (செயலாளர்)**

இலங்கை பொற்றொழிலாளர் சங்கம்.



முன்பள்ளி ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப்பிரிவு மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், முன்பள்ளி இணைப்பாளர் ஆகியோருக்கான முன்பள்ளி ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சி மற்றும் முன்பள்ளி தரவுப் படிவம் தயாரித்தல் ஆகியன தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஜெயா தம்பையா செயலமர்வை நடத்துவதையும் கலந்துகொண்ட முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், முன்பள்ளி இணைப்பாளர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## ஜனநாயக தொழிற்கட்சியின் முதலாவது செயற்குழு கூட்டம்

(கொழும்பு)

இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வரும் கட்சியான "ஜனநாயக தொழிற்கட்சியின்" செயற்குழு கூட்டம் அண்மையில் ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் அதன் தலைவர் சா.சத்தியேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குக் கட்சியின் பொதுச் செயலாளர் பியங்கா தீரசிங்க உட்பட கட்சியின் ஏனைய பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தின்போது பொருளாதார நெருக்கடியில் பின்தங்கியுள்ள வடக்கு, கிழக்கு பிரதேச நிலைமைகள் அதன் அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்னெடுப்புகள், அதற்காக சட்சித்தலைவர் மேற்கொண்டுள்ள நடைமுறைகள், வெளிநாட்டுப் பிரமுகர்களுடன் தொலைபேசியினூடாக எழுத்து மூலமாக மேற்கொண்ட உடன்படிக்கைகள் போன்றபல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அத்துடன் நாட்டின் தொழிலாளர் உரிமைகள் ஒற்றுமை அவர்களது வாழ்க்கை போராட்டம் பற்றிய பல விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இறுதியாக கட்சியின் நிர்வாக உறுப்பினர்கள் 23 பேர் தெரிவு செய்யட்டுள்ளதாக கட்சியின் தலைவர் சா.சத்தியேந்திரா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆபாச இணையத்தள விபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

ஆபாசக் காட்சிகள் அடங்கிய மேலும் 50க்கும் மேற்பட்ட இணையத்தளங்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 15 இணையத்தளங்களில் உள்ள ஆபாசக் காட்சிகளில் இலங்கையின் இளைஞர், யுவதிகள் தோன்றியுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

எதிர்காலத்தில் இந்த இணையத்தளங்களையும் தடைசெய்வதற்கு நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபாசக் காட்சிகள் அடங்கிய 284 இணையத்தளங்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இதுவரை தடைசெய்யப்பட்டுள்ளன.

இணையத்தளங்களில் ஆபாசக் காட்சிகளில் தோன்றும் உள்நாட்டு இளைஞர், யுவதிகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## சிறுநீரகக் கொடையாளர்களின் தகவல்கள் சேகரிப்பு

(கொழும்பு)

சிறுநீரகக் கொடையாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதற்கமைய ஏற்கனவே 10 வைத்தியசாலைகளில் சிறுநீரகக் கொடையாளர்களின் தகவல் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை ஒத்துழைப்பு மன்றத்தின் தலைவர் அஜித் எஸ் பெரேரா தெரிவித்தார்.

இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுநீரகங்களைத் தானம் செய்வதற்கு முன்வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வெற்றியளித்தால் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளைக் காலதாமதமின்றி மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுநீரகங்களைத் தானம் செய்ய விரும்புவோர் தமது சங்கத்துடன் 0112824373 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தரலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**

ந.விதுஷன்-169, ப.கோபிகா-169, பா.பானுஜா-158, க. கோபிகா-158, பு.வித்தகி-158, சி.கோகுலன்-157, கு.தர்மினி-156, வ.ஹரிராஜ்-154; த.கிஷானி-151, த.மிதுரா-150, ஜெ.கிலாந்தி-148, வ.அரிராஜ்-147, வே.டிலக்சன்-147, சி.சேயோன்-146, அ.அனோஜன்-146, லி.சிவகாந்-145, மு.கீதனன்-145, இ.மதுஷா-144, வே.மதிவேணி-144, கி.மிதுர்ஷா-144

**கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை**

ஜெ.ஓவியா-150, கி.அனுசா-145, ஜெ.ஆர்த்தனன்-142

**யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

சி.நிவேர்ஜன்-155, வ.தேனுஜா-150, அ.காஷ்ரோ-145

**கிளி/ முருகானந்தா ம.வி.**

சி.சுலக்ஷிகா - 179, பா.மிதுஷியா -161, கே.சங்கீத்தனன் -158, ஆர்.றவீந்திரன் -149, சி.சாதுரியன் -143, கே.அனுஷா-139.

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

க.ஸ்வர்ணா -163, து.கோபிகா - 155, இ.திவாகரன் -149, செ.செந்தூரன் -149

**யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

இ.பரண்ராஜ்-168, சு.சிரோமி-167, சி.மதுசன்-165, சி.சரணியா-158, ஜெ.ஜெனுசியா-158, உ.மானஷிதா-154, சி.பானுஷா-153, பா.வசந்தகௌரி-151, சா.நிலானி-151, அ.டினுஜா-151, க.நிதுர்ஷிகா-151, சி.கீர்த்தனா-150, ச.லோசன்-150, ச.கௌதமன்-150, த.கீர்த்திகா-150, அ.கிருஷாந்-149, க.பானுசன்-149, வி.ரதுஜன்-148, யோ.தனுராஜ்-146, ஸ்ரீ.கஜன்ஷன்-145, ர.திலக்ஷன்-145, செ.ரிஷிகா-142.

இவர்களுடன் பரீட்சைக்குத் தோற்றிய 84 மாணவர்களில் 62 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

**யா/புற்றளை மகாவித்தியாலயம்**

பா.நவநீதன் -169, ஜெ.விபுலன்-164, ந.ராகவன்-163, செ.வேணுஜன் -163, கு.திவ்வியா -157, ம.மதன்-156, மா.சாறுஜா -154, பூ.கீதாஞ்சலி-150, பா.ஜதுகிரி -145, யா. கௌசிகா-142

**யா/ துன்னாலை மேற்கு மெ. மி.த.க. பாடசாலை**

ம.மலன்பன்-171, சி.சிவந்தினி -161, வி.கம்சிகா -155, த.கபிலன்-154, பு. யாழினி-144

**யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம்**

மு.விேனோ-145

**யா/ வல்வை றோ.க.த.க பாடசாலை**

ந.பூஜா-155

**யா/ வல்வை அ.மி.த.க. பாடசாலை**

செ.நிரந்திகா-154

**கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்**

பூபாலசிங்கம் டிலக்ஷனா-149
சந்திரசேகரம் மிதுஷா 142 (ஸ்ரீ-19-24)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
எண்ணம் தனில் நிறைந்து - இன்று
விண்ணில் விரும்பி அமர்ந்த
கண்ணனைய எம் தந்தை

உருவாய் மண்ணில் 1942 . 03 . 16

அருவாய் விண்ணில் 2010 . 08 . 30



**அமரர் பொன்னையா செல்லையா**
(மீசாலை)

வாடி வருந்திநின்று வாடாது எமைக்காத்த
வல்ல பெருந்தகையே வாடினமே- நாடியெமை
கோடி பணி செய்து கோலமாய் வளர்த்தெடுத்த
கோபுரமேன் சரிந்ததையோ…ஓ…?

சிந்தை தனில் நிறைந்த சிங்காரச் சிரிப்பெங்கே?
செழிக்க வாழ்ந்த புகழ் வாழ்வெங்கே? - விந்தையுற
எந்தை வாழ்ந்திட்ட எழில் வாழ்வு ஓய்ந்ததுவோ?
சுந்தரநல் விறைதாளில் சிறந்து வாழி!

எம் அன்புத்தந்தையின் 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் - சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறுகின்றன. இந் நிகழ்வுகளிலும் - அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.


மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து அனைத்து வழிகளிலும் உதவியும் - துயர் பகிர்ந்தும் - ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இதயம்கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
2010.09.28

(2561)

குடும்பத்தவர்
தொலைபேசி இலக்கங்கள்
0217333666
0774440260



சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் உலகம் ஒளிபெற அனைத்துக் கரங்களையும் ஒன்றிணைப்போமா எனும் தொனிப்பொருளில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், சாந்திகத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலகம் சிறுவர் பகுதியினரின் சிறுவர் சமாதானப் பேரணி அண்மையில் ஏழாலை தெற்கு ஐரோப்பிய மண்டபத்திற்கு முன்பாக ஆரம்பமாகி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்டமுகாமையாளர் கே.மகேந்திரன் சிறப்புரையாற்றுவதையும் சிறுவர்களின் பேரணியினையும் படங்களில் காணலாம்.

### விளைவேலி-அம்பலந்துறை வரையான

## வாய்க்கால் சர்வோதய அமைப்பினால் புனரமைப்பு

(கல்வயல்)

கல்வயல் விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் விளைவேலி-அம்பலந்துறை வரையான வாய்க்கால் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் சர்வோதய அமைப்பினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலைத்திட்டமானது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து கல்வயல் (ஜே/305) கிராம அலுவலர் பிரிவில் வசித்துவரும் மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவர்களுக்கு இலகு வேலைத்திட்டத்தின் கீழ் இதற்கான கூலி வழங்கப்படுவதாகவும் கல்வயல் கிராம உத்தியோகத்தர்களும் இதற்கு பங்களிப்பு வழங்குவதாக கல்வயல் விவசாய சம்மேளன தலைவர் கா. வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-31)

## கிளி. மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டத்திற்கு மணல் கொண்டு செல்வதற்கு அனுமதியில்லை

### கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு மணல் கொண்டு செல்வதற்கு அனுமதியில்லை என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுமக்களது வீடுகள், கடைகள், அரச ,அரசசார்பற்ற நிறுவன கட்டடங்களின் பெரும் பகுதிகள் சேதமடைந்துள்ளமையால் இத்தேவைக்கு பெரும் தொகையான மணல் தேவைப்படுகின்றது.

அத்துடன் மணல் அகழ்வதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளமையால் இம் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டத்திற்கு மணல் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை இம் மாவட்டத் தேவைகளிற்காக மணல் அனுமதி வழங்குவதற்காக எம்மால் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன இதற்கமைய,

1. மணல் எடுக்கக்கூடிய பிரதேசங்களில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் மணலை ஓரிடத்தில் சேமித்து மணல் கோரிக்கைகளிற்கு ஏற்ப வழங்குதல்

2.மணல் தேவைக்கு உரிய கோரிக்கைகள் கிராம உத்தியோகத்தர் விதந்துரையுடன் உதவி அரசாங்க அதிபரால் அனுமதிக்கப்பட்டு, குறிப்பிட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தில் பெறப்படல் வேண்டும்.

3.மணல் எடுப்பதற்கு புவிச்சரிவதவியல் திணைக்களம், சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை அனுமதி வழங்கப்பட்ட இடங்களிலேயே அனுமதி வழங்கப்படும்.

சுற்றாடல் பாதிப்பை ஈடுசெய்வதற்காக கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் ஒரு குறிப்பிட்ட தொகைப்பணத்தை மணல் பெறுபவரிடம் அறவிட முடியும்.

5 .கிராம அபிவிருத்தி சங்கங்களிடம் இருந்து மணலைப் பெற்ற வேலைத்தளத்திற்கு கொண்டு செல்வதற் கான வாகனங்களிற்கான அனுமதி குறிப் பிடப்பட்டவர்களிற்கு குறிப்பிடப்பட்ட அளவு வாகனங்களின் விபரங்கள் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபர் அறிவிப்பார்.

6. அனுமதியின்றி மணல் கிரவல் அகழ்வு நடைபெறுவது நிறுத்தப்பட்டுள்ளது.

7. ஒரு ரக்டர் லோட் மணல் ஆயிரத்து 500 ரூபா வீதம் மணல் அகழ்விற்காக அனுமதி பெற்ற மணல் விற்பனை நிலையத்தில் இருந்து அனுமதி பெற்ற வாகனங்களில் பெறமுடியுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## ஆர்ப்பாட்டம் மூலம் ஆஸி.அரசு மீது ஆதிக்கம் செலுத்த முடியாது

### அந்நாட்டின் குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

அவுஸ்திரேலியா வில்லாவூட் தடுப்பு நிலை யக் கூரையின் மீதேறி 9 இலங்கைத் தமிழ் அகதிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்பிரவுன் இவ்வாறான ஆர்ப்பாட்டம் மூலம் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது எனக் கூறினார்.

ஒவ்வொரு குடிவரவுத் திணைக்களமும் புகலிடக் கோரிக்கையாளர்களின் தனிப்பட்ட குணாதிசயங்களை ஆராயுமே என்பதுடன் ஆனால் இவ்வாறான ஆர்ப்பாட்டம் மூலம் அதிகாரம் செலுத்த முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

சிலவேளையில் இந்த வாரம் தனி நபர்களின் குடிவரவு அந்தஸ்து மதிப்பீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகி றது.

அவுஸ்திரேலியா வில்லாவூட் தடுப்பு நிலையக் கூரையின் மீதேறி 9 இலங் கைத் தமிழர்கள் உட்பட 11 பேர் நீராகார மின்றி 24 மணித்தியாலங்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 21 ஆம் திகதி முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் 213 மில். டொலர் கடன் வழங்க ஒப்புதல்

இலங்கைக்கு 213 மில்லியன் டொலர் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பை மீண்டும் தூக்கி நிறுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நான்குமுறை இதுபோன்ற கடன்களை இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ளது. இப்போது வழங்கப்பட்டுள்ள 5 ஆவது தவணை கடனையும் சேர்த்தால் இதுவரை இலங்கை 1.3 மில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுள்ளது.

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த வழங்கப்படும் இத்தகைய கடன்களுக்கான நிபந்தனைகளை இலங்கை திருப்திகரமான முறையில் நிறைவேற்றி வருவதால் ஐந்தாம் முறையாக கடன் தருவதாக நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் திருப்திகரமான விதத்தில் முன்னேறி வருகிறது.

கடந்த ஆண்டை விட அரசியலில் நிலையான தன்மை நிலவு வதைப் பார்க்க முடிகிறது என்று சர்வதேச நாணய நிதியம் தனது செய்திக் குறிப்பில் கூறியுள்ளது.

(ஸ்ரீ-2)

## இடம்பெயர்ந்த மக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இணைப்பு

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் இருந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள பொது ம்க்களை வாக்காளர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்வது தொடர்பில் தமது வேலை களை தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் செய்தி இணையத் தளத்திற்கு தெரிவித்த பிரதி தேர்தல்கள் ஆணையாளர் நிஷாந்த திரிபிய ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கிராம அலுவலர் மூலம் இதற்கான தகவல்கள் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

எவரின் பெயர்கள் சேர்க்கப்படும் எனவும் எதிர்வரும் நவம்பர் முதல் ஜனவரி வரையிலான 3 மாதகாலப்பகுதிக்குள் அல்லது எதிர்வரும் 4 வாரகாலத்திற்குள் இரண்டாவது பட்டியலில் வாக்காளர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்படும் எனவும் நிஷாந்த திரிபிரிய தெரிவித்தார்.

இதனையடுத்து கடந்த 2009ஆம் ஆண்டுக்கான வாக்காளர்கள் பட்டியலில் இவர்களின் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் எனவும் மேலும் அவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

## பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவக பிரிவுகளின் எல்லை மீளமைப்பு கூட்டம் இன்று

(கொழும்பு)

பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவக பிரிவுகளின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் ஆணைக்குழு இன்று செவ்வாய்க் கிழமை மீண்டும் கூடவுள்ளது.

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பிலான மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிக்கைகள் இதன் போது பரிசீலிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறையின் கீழ் பிரதேச வாரியன அரசியல் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ளும் நோக்கில் ஒவ்வொரு பிரதேசத்திலும் புதிய கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆராய்வதற்கு பொது நிர்வாக அமைச்சினால் எல்லை மீளமைப்பு ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு இது தொடர்பில் ஆராய்கிறது.

இதன்படி இன்று அரசாங்க அதிபர்களின் அறிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து அதன் அடிப்படையில் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க விருப்பதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தில் 29உ என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ம் இலக்க வங்கிச் சட்டத்தில் 29உ என்னும் பிரிவில் கீழ்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 31-07-2009ந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென் இத்தால் அறியத்தரப்படுகிறது.

யாழ். பிரதேச நொத்தாரிசு திருமதி ஸிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 05.11.2003ஆந் திகதி இலக்கம் 4064 கொண்டதும் மற்றும் 23.12.2005ஆம் திகதி கொண்ட இலக்கம் 5696 ஈட்டு முறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு.கந்தையா சசிகரன், சின்னப்பு கந்தையா, கமலேஸ்வரி கந்தையா ஆகியோர் தவணை தவறியுள்மையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது ரூபா நாலு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து ஐநூற்றுத்தொண்ணூறும் சதம் தொண்ணூற்று மூன்று (ரூபா (429,590/93) பணத்தொகையை ஈட்டுமுறி இல:4064 பிரகாரம் ரூபா பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு சதம் முப்பத்து நாலு (ரூபா1,296,978/34) ஈட்டு முறி இலக்கம் 5696 பிரகாரம் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத் தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இத் தருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 4064 உம் 5696ஐயும் கீழ் வங்கிக்கு ஈடுசெலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவு அதிகாரம் பெற்ற ஏலதாரர் கார்ரிகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேர வேண்டிய ரூபா நாலு இலட்சத்து இருபத் தொன்பதாயிரத்து ஐநூற்றித்தொண்ணூறும் சதம் தொண்ணூற்றி மூன்றும் (ரூபா 429,590/93) 25.08.2006ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை இருபது தசம் இரண்டு ஐந்து (20.25வீதம்) வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபாய் பன்னிரண்டு இலட்சத்துத் தொண்ணூற்றி ஆறாயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டு சதம் முப்பத்துநாலுக்கு (12,96,978/34) 22.07.2006 திகதியிலிருந்து விற்பனைத்திகதி வரை (22.5 வீதம்) வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அதைத் தவிர்த்து மக்கள் வங்கிச் சட்டம் 29 எல் பிரகாரம் அறவிடப்படும். அத்துடன் ஏனைய வரவு தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவில்பற்று அராலி தெற்கு இறை "பிளக்கவெட்டியான்" என்றழைக்கப்படும் உறுதியின் படி நிலபரப்பு 2ம் 0.67குளி வ.செ விஸ்தீரணம் கொண்டது. ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் .நிமலேந்திரன் 24ஆம் திகதி மே மாதம் 2002இல் தயாரித்துள்ள இலக்கம் 40 வரைபடத்தில் துண்டு 1.எனச் சுட்டப்பட்டதில் நில பரப்பு 2உம் 5.738 குளி வ.செ விஸ்தீரணம் உள்ளதுக்குள் வரும் வீடும், கிணறும், செய்பயிர், வனபயிர் அங்குள்ள அதற்குச் சேர்ந்தவைகளும் இங்கு சொல்லப்பட்ட நில பரப்பு 2உம் 5.738 குளி விஸ்தீரணம் கொண்டதுக்கும் எல்லைகளாவன:

கிழக்கு: நடராஜா பெண் பூமலர்க்குரிய ஆதனம்

வடக்கு: றோட்டு

தெற்கு: கந்தசாமி பெண் கனகம்மாவிற்குரிய ஆதனமும் கணேசலிங்கம் பெண் பத்மாதேவிக்குமுரிய ஆதனம்

மேற்கு: இராமு பொன்னுத்துரைக்கும் மற்றும் கந்தையா பாஸ்கரனுக்குமுரிய ஆதனம்.

(இவை யாவும் யாழ்ப்பாணம் காணிப்பதிவு காரியாலயத்தில் E 690/209இல்) 10.11.2003 திகதியிலும் E690/233இல் 02.01.2006ஆந் திகதியிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்சபை கட்டளைப்படி,
உதவி பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி வடபிராந்தியம்.

# மக்கள் வங்கி

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29உ என்னும் பிரிவின் கீழ் ஆதன தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29உ என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2008.05.30ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.06.25ஆந் திகதி கொண்ட இல 5258 இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு பொன்னையா சற்குணமும், திருமதி சற்குணம் சறோஜாவும் தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்து எட்டு ரூபா (1,799,948.00) பணத்தொகையை ஈட்டு முறி இல 5258 பிரகாரம் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கி சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ் வருமதி கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிட்ட ஈட்டு முறி 5258இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனம் யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டையும் ரூபா (179,9948.00)பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ரூபா(179,9990.00) 2006.10.17 திகதியிலிருந்து விற்பனை திகதிவரை 20.25% வீதம் வருடாந்த வட்டியும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச்சட்ட "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது:

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1) வடமாகாணம், யாழ்மாவட்டம், வலிகாமம் மேற்கு பிரிவு, சங்கானை பரிஷ், சங்கானை மேற்கு இறை "வெள்ளுருவன் கூடல்" நிலப்பரப்பு 2 வ.க உறுதியின் படி ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்தின் 2004.07.20ஆம் திகதி வரையப்பட்ட இல 4017A படத்தின் படி பிரிவு 1இல் பரப்பு 2 வ.க குளி 06.759 உடன் வீடு கிணறுடன் அங்குள்ள அனுபந்தங்களுடன் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2 வ.க குளி 06.759இன் எல்லை கிழக்கு கலைவாணி சிறுவர் இல்லமும், ஆறுமுகம் குமரேசனின் ஆதனமும், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கை, தெற்கு கிருஷ்ணராசா பெண் மங்கையற்கரசியின் ஆதனம் இலக்கம் ஈ 575/187 இன் கீழ் யாழ்ப்பாணக் காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளை சங்கானை,
மக்கள் வங்கி.

(-சி-1299)

பணிப்பாளர்சபை கட்டளைப்படி,
உதவி பொது முகாமையாளர்,
வடக்கு வலயம்.

# முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களையும் வாக்காளர் இடாப்பில் சேர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களையும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட திட்டமொன்று ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை அவர்களின் உறவினர்களிடமிருந்து திரட்டவுள்ளதாகவும் இது தொடர்பாக புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் நேரடியாகவும் தேர்தல் அதிகாரிகளிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாண உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களூடாக இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வடமாகாண கிராம உத்தியோகத்தர்களுக்கும் இது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுவதோடு வாக்காளர் இடாப்புத் திருத்தித்திற்கான படிவங்களை பூர்த்திசெய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை அதிகாரிகளிடம் ஒப்படைக்க முடியுமெனத் தேர்தல்கள் செயலகம் கூறுகிறது.

வடமாகாணத்தின் சில மாவட்டங்களில் மீள் குடியேற்றப் பணிகள் பூர்த்தியடையாத நிலையில் வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலையில் தேர்தல் பணிகளை இலகு படுத்தும் வகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தேர்தல் அலுவலகம் ஒன்றையும் தேர்தல் செயலகம் திறந்து வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு மழையால் பாதிக்கப்படாத இருப்பிடங்கள்

(கொழும்பு)



வடபகுதியில் மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் மழையால் பாதிக்கப்படாத வகையில் தற்காலிக இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு மேலதிகமாகக் கூரைத் தகடுகள், மரங்கள் மற் றும் ஓலைகள் என்பன விநி யோகிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கு விரைவில் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை யுத்தம் நிலவிய போது வவுனியா மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மேலும் சில குடும்பங்கள் நிவாரண நிலையங்களில் இருப்பது தெரியவந்துள்ளதுடன் அவர்களை விரைவில் மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரியாலை பிரதேசத்தில் இன்று ஏர்பூட்டு விழா

வடக்கில் பெரும்போக பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு யாழ். அரியாலை பிரதேசத்தில் ஏர்பூட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்முறை பெரும்போகத்தின் போது வடக்கில் 80 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த வடமாகாண ஆளுநர் இதன் ஆரம்பக்கட்ட நிகழ்வாகவே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

அரியாலை பிரதேசத்தில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இந்த ஏர்பூட்டு விழாவில் வட மாகாணத்தைச் சேர்ந்த பெருந்தொகையான விவசாயிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்காக நிலத்தைப் பண்படுத்தும் பொருட்டு இன்று சுபவேளையில் இந்த ஏர்பூட்டு வைபவம் இடம் பெறவுள்ளது.

பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரம் மற்றும் பொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஆளுநர் இம்முறை பெரும்போகத்தில் அதிக விளைச்சல்களை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிலங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதேவேளை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள சில காணிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பிரதாயபூர்வமான முறையில் நடைபெறவுள்ள இந்த ஏர் பூட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் விவசாய அமைச்சு, வட மாகாண சபை மற்றும் அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

# அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்துக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர்கள் கொள்ளையடிப்பதற்காக அரசியல் நடத்துவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

செல்வந்தராக விரும்புவோரே பிரதேச சபையில் போட்டியிடுவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அமைச்சில் இந்த கருத்துத் தொடர்பில் அகில இலங்கை பிரதேச சபை ஒன்றியம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள் ளது.

அரசாங்க அமைச்சர் ஒருவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் நிமால் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

மாதாந்தம் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒன்றை மட்டும் பெற்றுக்கொண்டு பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களுக்காக சேவை ஆற்றிவருவதாக அவர் குறிப்பி ட்டுள்ளார்.

குற்றச்செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரை சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை என்ற போதிலும், ஒட்டு மொத்த பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் குற்றம் சுமத்துவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் விமல் வீரவன்ச தமது கருத்தினை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் கருத்து வாபஸ் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்களில் படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை

## இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும்பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களில் படையினரைஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அம்பாறை ,மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களில் மேற்கொள்ளப் பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்களில் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளின் போது இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதன் மூலம் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவுகளை விருத்தி செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பொலிஸாருடன் இணைந்து படையினர் பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் மட்டக்களப்பு மற்றும் அம் பாறை மாவட்டங்களில் தொடர்ச்சியாக விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப் படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல் ,அம்பாந்தோட்டை,புத்தளம் மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களிலும் இராணுவத்தினர் அபிவிருத்தித்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹங்கேரி ஜனாதிபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ளும் தமது நாட்டு பிரஜைகளுக்கு வழங்கப் பட்டிருந்த சுற்றுலா வழிகாட்டல் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதாக ஹங்கேரி ஜனாதிபதி பெல் சிமித் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நியூயோர்க்கில் நடத்திய இரு தரப்பு பேச்சுவார்த்தையின் போதே ஹங்கேரி ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த சுற்றுலா வழிகாட்டல் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதன் மூலம் இலங்கையில் சுற்றுலா மேற்கொள்வதற்கு உகந்த நாடாக பிரகடனப்படுத்தவதாகவும் ஹங்கேரி ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்த தலைமைத்துவப் பொறுப்புக்கு ஹங்கேரி தெரிவாகியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்புகள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தவுள்ளதாகவும் ஹங்கேரி ஜனாதிபதி பெல்சிமித் இணங்கியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது 2012,2013ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை அங்கத்துவத்தை பெற் றுக் கொள்வதற்காக தமது நாட்டிற்கு ஆதரவு அளிக்குமாறு ஹங்கேரி ஜனாதிபதி இதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஹங்கேரி ஜனாதிபதி பெல்சிமித்துக்கும் இடையிலான இந்தச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய சூழ்நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் சலுகை அடிப்படையில் இலங்கைக்கு கடனுதவிகளை வழங்குவது தொடர்பிலும் ஹங்கேரி ஆராய்ந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹங்கேரிப் பல்கலைக்கழகங்களுக்கு இலங்கை மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக இதன் போது இணக்கம் காணப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-3)

# ஈறு நோய்களுக்கு 5 மணி நேரத்தில் சிகிச்சை

(லண்டன்)

ஈறுகளில் ஏற்படும் நோய்களை 5 மணி நேரத்தில் தீர்க்கும் புதிய சிகிச்சை முறையை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சிகிச்சை மூலம் ஈறுகளில் உள்ள பிரச்சினைகள் தீர்வதுடன் பற்களும் வலுவடையும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பற்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பலம் ஈறுகளுக்கு கொடுப்பது இல்லை.

இதுவே பிரச்சினைக்கு காரணமாகி விடுகிறது. புதிய சிகிச்சை முறையில் சிதைந்த ஈறுகளை சீராக்குவதும் பலப்படுத்துவதும் மிக எளிது என்றும் அந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# 28.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- கிமு48 - எகிப்திய மன்னன்தலமியின் ஆணையை அடுத்து மாவீரன் பார்ம்பீ படுகொலை செய்யப்பட்டான்.
- 0935 - புனித வென்செஸ்லாஸ் அவரது சகோதரனால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1066 - முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.
- 1448 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடிசூடினான்.
- 1687 - கிரேக்கத்தின் பழங்காலக் கட்டிடம் பார்த்தினன் குண்டு வெடிப்பில் சேதமடைந்தது.
- 1708 - ரஷ்யாவின் முதலாம் பீட்டர் மன்னன் சுவீடன் படைகளை லெஸ்னயா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.
- 1795 - யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றினர்.
- 1867 - டொரோண்டோ ஒண்டாரியோவின் தலைநகரமாகியது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைக் கைப்பற்றியது.
- 1889 - நிறை மற்றும் அளைவைகளுக்கான பொது மாநாட்டில் மீட்டரின் நீளமானது பனிக்கட்டியின் உருகுநிலையில் 10 விழுக்காடு இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோள் ஒன்றின் இரண்டு கோடுகளிற்கிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.
- 1895 - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டிடம் கட்டப்பட்டது.
- 1928 - அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலினைக் கண்டுபிடித்தார்.
- 1939 - நாசி ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போலந்து நாட்டை தமக்குள் பங்கு போட உடன்பட்டன.
- 1939 -இரண்டாம் உலகப் போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவப் படைகள் எஸ்தோனியாவில் இருந்த நாசிகளின் குளூகா வதைமுகாமை விடுவித்தனர்.
- 1958 - பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1961 - டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியாஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது.
- 1994 - பால்ட்டிக் கடலில் சுவீடன் சென்று கொண்டிருந்த எஸ்தோனியப் பயணிகள் கப்பல் மூழ்கியதில் 852 பேர் கொல்லப்பட்டனர்.
- 1939 -கொப்டெனாட் மற்றும் சில கூலிப்படைகள் கொமரோஸ் தீவுகளை கைப்பற்றினர்
- 2005 - ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தது.

## பிறப்புகள்

- கி.மு 551 - கன்ஃபூசியஸ், சீனாவின் பகுத்தறிவாளர் (இ. கி.மு 479)
- 1852 - ஹென்றி முவாசான், பிரெஞ்சு வேதியியல் அறிஞர் (இ. 1907)
- 1929 - லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி.
- 1947 - ஷேக் ஹசீனா,பங்களாதேஷின் முன்னாள் பிரதமர்
- 1982 - அபினவ் பிந்திரா, இந்திய ஒலிம்பிக் வீரர்
- 1982 - எமெக்கா ஒகஃபோர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1895 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1822)
- 1953 - எட்வின் ஹபிள், அமெரிக்க வானியலாளர் (பி. 1889)
- 1956 - வில்லியம் போயிங், அமெரிக்க வான்வெளி முன்னோடி (பி. 1881)
- 1970 - கமால் அப்துல் நாசர், எகிப்திய ஜனாதிபதி (பி. 1918)
- 1989 - பேர்டினண்ட் மார்க்கொஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (பி. 1917)

**1978 - பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர் இறந்தார்**



# ஈழத்தவர் வரலாறு


49

## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

யாழ்ப்பாணக் வைபவ விமர்சனம் என்ற சரித்திர நூலின் ஆசிரியரான சுவாமி ஞானப் பிரகாசரின் கருத்தின்படி, எண்ணூற் றெழு பது என்பது 870 அன்று. ஆயிரமாகிய பேரெண்ணும் நூற்றியெழுபதும் சேர்ந்த கணக்காகுமெனத் தோன்றும், எண் என்றால் 1000. இந்த 1000 + 107 = 1107 சகவருடம் 1107 ஆம் ஆண்டு என்றால், அது கி.பி. 1248 ஆம் ஆண்டைக் குறிக்கும் என்பதாகும்.

கி.பி.1242 இல் உத்தரதேசத்தின் மன்னனாக விளங்கியவன் விசயகாலிங்க ஆரியச் சக்கிரவர்த்தியாவான். இவனே வைபவ மாலை குறிப்பிடும் பாண்டிமழவன் என்பவன் அழைத்து வந்த சிங்கையாரியன் ஆவான். இந்த சிங்கையாரிய மன்னனுக்குப் புவனேகவாகு என்பவன் மந்திரியாக இருந்துள்ளான்.



நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பழைய தோற்றம்.

யாழ்ப்பாண இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டில் தான் உருவாகி நிலைத்திருந்ததெனக் கருதும், முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோருட்பட நவீன வரலாற்றறிஞர்கள் சிலரும், கந்தனாலயம் யாழ்ப்பாண இராச்சியம் செழித்தோங்கியிருந்த ஒரு காலகட்டத்தில் தான் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். சிங்கைநகரில் ஆட்சிப்பொறுப்பேற்ற காலிங்கச் சக்கரவர்த்தி தனது தலைநகரைக் குடாநாட்டிற்கு மாற்றிக்கொண்டான். அதற்காக யாழ்ப்பாண நகரியைத் தனது மந்திரி புவனேகவாகுவைக் கொண்டு கட்டுவித்தான். யாழ்ப்பாண நகரியை நல்லூர்க் குடியிருப்பில் உருவாக்கிய புவனேகவாகு கந்தவேட்கும் அங்கு ஓர் ஆலயம் எடுப்பித்தான்.

யாழ்ப்பாண வரலாற்றில் சம்பந்தப்படும் மூன்றாவது புவனேகபாகு, கி.பி.1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட தென்னிலங்கை இளவரசன் சப்புமல் குமரயா என்ற செண்பகப்பெருமாள் என்ற சிறீ சங்க போதி புவனேகவாகு ஆவான்.

### முதலாவது ஆலயம்

எனவே, நல்லைக்குலவிய கந்தவேட்குக் கோயில் கட்டப்பட்டது. கி.பி.948 ஆம் ஆண்டிலா அல்லது கி.பி.1248 ஆம் ஆண்டிலா என்பது முடிவு செய்யப்பட வேண்டிய தொன்றாகும். முதலாவது ஆலயம் கி.பி.948 ஆம் ஆண்டு கட்டப்பட்டதெனக் கொண்டால் அது இராசப் பிரதிநிதியாக விளங்கிய புவனேகவாகுவால் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறன்றி முதலாவது ஆலயம் கி.பி.1248 ஆம் ஆண்டு காலிங்க ஆரியச் சக்கரவர்த்தியின் மந்திரியாகவிருந்த புவனேகவாகுவால் கட்டப்பட்டதாயின் யாழ்ப்பாண நல்லூரிலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விரு கருத்துக்களிலும் பின்னதே சாத்தியமானதும் ஏற்றதுமாகவுள்ளது. எனவே, கி.பி.1248 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணவரசனின் மந்திரியாக விளங்கிய புவனேகவாகு / புவனேகவாசர் குருக் கள் வளவு என்று இன்று வழங்கப்படும், அருள் விளக்கத்துடன் இன்று விளங்கும் திருக்கோயில் அமைந்துள்ள இதேயிடத்தில், முதலாவது கந்தவேள் ஆலயத்தைக் கட்டுவித்தான் எனத் துணியலாம்.

### கந்தசுவாமிகோயிலின் அழிவு

கனகசூரியசிங்கையாரியன், வடவிலங்கையை ஆண்டவேளை, தென்னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங்கினான். அவன் ஆரிய அரசர்கள் மீது மாறாத, பகைமை கொண்டிருந்தான். 1450 ஆம் ஆண்டு தனது வளப்புப் புத்திரனும், சேனாதிபதியான சப்புமல் கும ரயா (செண்பகப்பெருமாள்) என்பானைப் பெரும்படையுடன் உத்தரதேசத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பினான். அவனது படை முன் எதிர் நிற்கவியலாது, தமிழ்ப்படை தோற்றது. கனகசூரியசிங்கையாரியன் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியாவிற்கோடிப்போனான்.

அநுராதபுரத்திலிருந்து பெரும்படையுடன் புறப்பட்ட சப்புமல்குமரயா உத்தரதேசம் எல்லாம் வெற்றி கொண்டு யாழ்ப்பாண நகரினுள்ளே யாபாபட்டுன புகுவதற்கு முன் பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த சிங்கை நகரைத் தாக்கி அங்கிருந்த மாளிகைகள், கட்டடங்கள் என்பனவற்றை அழித்தான்.

'சப்புமல்குமரயா யாழ்ப்பாணத் தலைநகரிட் புகுந்து, மதங்கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று, அந்த நகர் ஆவணங்களெல்லாம் இரத்தவெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாடமாளிகைகளையெல்லாம் இடிப்பித்துத் தரைமட்ட மாக்கினான். சீரும் சிறப்போடும் செழித்து விளங்கிய பொங்கொலி நீர்ச் சிங்கைநகர், சப்புமல் குமரயா வின் படையெடுபபால் சிதைந்து அழிந்தது.

சிங்கை நகரை அழித்துத் தரைமட்டமாக்கிய சப்புமல்குமரயாவின் படை, நல்லூரிற் புகுந்தது. அப்படை யாழ்ப்பாணத்தைத் தாக்கிய போது, நகரிலிருந்த மாடமாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பழைய தலைநகர் பாழாய்விட்டது. சப்புமல்குமரயாவின் யாழ்ப்பாண வெற்றியைப் புகழ்ந்து

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்

பாடும் 'கோகில சந்தேஷிய' எனும் குயில் விடுதூதுப் பிரபந்தம் ஒன்று, யாழ்ப்பாணப் பட்டினத்தின் சிறப்புக்களையும், படை சென்ற பாதையில் நிகழ்ந்த யுத்த அழிவுகளையும் பெருமையாகப் பாடியுள்ளது. எனவே சப்புமல் குமரயாவின் படை தலைநகரைத் தரைமட்டமாக்கியது எனக் கொள்வதில் தவறில்லை. அவ்வேளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் தகர்த்தெறியப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. (தொடரும்)



பருத்தித்துறை நாவலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் முன்பள்ளி ஆசிரியை திருமதி ஆர்.கௌரிபாலன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் மற்றும் முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவி திருமதி வி.ஜெயசீலன்,பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் ரி.சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் முயற்சியாண்மை தொடர்பான பயிற்சிகள்

(கொழும்பு)

இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் முயற்சியாண்மை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. முயற்சியாண்மை தொடர்பில் மூன்று நாள் பயிற்சிகள் நடைபெற்றதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தூத்துக்குடி பலநோக்கு சமூக சேவை கள் மையத்தினால் இந்த பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் இலத்திரனியல் தரவு செயற்பாடு குறித்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு தமிழ் மொழியை கற்பிக்க நடவடிக்கை

முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

படைத்தரப்பைச் சேர்ந்த அனைவருக்கும் தமிழ் மொழிப் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு கோத்தபாய ராஜபக்ஷ உத் தரவுவிட்டுள்ளார்.

குறிப்பாக வடக்கு -கிழக்கில் கடமையாற்றி வரும் இராணுவம், கடற்படை, வான் படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குதமிழ்மொழிப்பயிற்சி வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் தமிழ் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு மொழியறிவு மிகவும் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதற்கமைய பயிற்சிநெறியைப்பூர்த்தி செய்வோருக்கு மொழித்திணைக் களத்தி னால் சான்றிதழ் வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாடசாலை நலன்விரும்பியும் தொழிலதிபருமான மாணிக்கம் சுப்பிரமணியம் தம்பதிகள் மாணிக்கம் பாக்கியம் திறந்தவெளி அரங்கை நாடாவெட்டி அரங்கை திறந்து வைப்பதையும் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதையும் பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் உரையாற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத்துறை பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா பொன்விழா மலரை வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக்கொள்வதயையும் பாடசாலை கீதத்தின் இறுவட்டை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- என்.குமார்)

## மருந்துவகைகள் முடிவடைந்துள்ளதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியம்

பூநக்ரி பிரதேச சபையால் பல்லவராயன் கட்டில் இயங்கி வருகின்ற சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத மருந்துகள் முடிவடைந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களாக அங்கு செல்லும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இதனால் அங்கு செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குவதாக தெரியவருகிறது.

இந்நிலையில் மருந்துகள் முடிவடைந்த நிலையில் தேவையான மருந்துவகைளுக்கு விண்ணப்பித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்விடயத்தில் மேலதிகாரிகள் கவனமெடுத்து இவ்வைத்தியசாலைக்கு ஆயுர்வேத மருந்துகளை எடுத்துவருவதற்கு ஒழுங்குகளை செய்து தருமாறு பல்லவராயன்கட்டு ஜெயபுரம், கரியாலை மற்றும் நாகபடுவான் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-84)

## நாடு பின்னடைவை சந்தித்தமைக்கு அரசியல் மோதல்களே காரணம்

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்மோதல்கள்நாடுபின்னடைவைச் சந்தித்தமைக்கு காரணமாக அமைந் துள்ளது என பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முற்பகல் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மத ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் போது அரசியல் பேதமின்றி செயற்பட வேண்டும் என தெரிவித்த பிரதமர் பொருளாதார ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அரசியல் இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாமல் சேவையாற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மத ரீதியிலான செயற்பாடுகளின் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போதும் பாகுபாடு காட்டப்பட்டால் அந்த நடவடிக்கைகள் வெற்றியளிக்காது என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## அடுத்த வருடத்திற்கான புத்தக விநியோக நடவடிக்கை

அடுத்த வருடத்திற்கு தேவையான பாடசாலைப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கை வெற்றிகரமான முறையில் இடம்பெறுவதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் டபிள்யூ.எம்.எம்.ஜெ. புஸ்ப குமார தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நடவடிக்கை நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகள் 2ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் என்பவற்றிற்கு உடனடியாக பாடப்புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன.

ஏனைய பாடசாலைகளுக்கு தேவையான புத்தகங்களை பாடசாலை அதிபர்கள் உரிய நிலையங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள புத்தகப்பை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கென 172 வர்த்தகர்கள் கல்வியமைச்சின் கீழ் பதிவு செய்துள்ளார்கள்.

சுகா தரம் மற்றும் கல்வி அமைச்சுக்களும் இலங்கை தர நிர்ணய பணியகமும் இணைந்து புதிய புத்தகப்பையை பரிந்துரை செய்திருந்தன என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

## தனது விடாமுயற்சியால் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவி

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தனது வலது கையின் எலும்பும் நரம்பும் பாதிக்கப்பட்டு அக் கையின் செயற்பாட்டை இழந்த நிலையில் பூபாலசிங்கம் டிலக்சனா என்ற மாணவி தனது விடா முயற்சியினாலும் தன்னம்பிக்கையினாலும் இடது கையால் எழுதப் பழகி இவ்வருடம் நடை பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இது தொடர்பாக இவரது தாயாரான திருமதி பூபாலசிங்கம் கஜலக்ஷ்மி கூறுகையில்,

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் எனது மகளுக்கு வலது கையில் நரம்பும் எலும்பும் தாக்கப்பட்டது. பின்னர் அக்கையின் செயற்பாடு இழந்த நிலையில் தனது நான்காம் ஆண்டை கடந்த வருடம் 2009ஆம் ஆண்டு வவுனியா சி.சி.ரி.எம். எஸ். பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

இப்பாடசாலையில் இரண்டாம் தவணைக் கல்வியை தொடரும்போதே தனது இடது கையால் எழுத ஆரம்பித்து விட்டார். இப் பரீட்சையில் முதலாம் பிள்ளையாக வகுப்பில் வந்துள்ளார்.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தில் முதலாம் தவணையைக் கற்றார். பின்னர் நாங்கள் சொந்த இடமான அக்கராயன் குளத்திற்கு மீள் குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து கிளி/அக்கராயன் மாகாவித்தியாலயத்தில் தனது கல்வியை கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் கற்றார்.

இருந்தும் தனது வலது கையின் செயற்பாட்டை இழந்த போதும் கல்வியில் சோர்ந்துவிடாது உற்சாகத்தோடு கற்று இடது கையால் எழுதப்பழகி 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியமை பாராட்டுக் குரிய விடயமாகும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேத மருந்தகங்களை அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

கிராமிய, பாடசாலை மட்டங்களில் நோய் நிவாரணம் தொடர்பாக ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. சுக வாழ்வுக்கு தேவையான பின்னணியை ஏற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும் என்று ஆயுர்வேத மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமவீர சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கென தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. விசேட ஆயுர்வேத வைத்திய சேவைகள் தொடர்ந்தும் விரைவுபடுத்த இருக்கின்றன. ஆயுர்வேத மருந்துகளை கொள்வனவு செய்ய மருந்தகங்களில் ஆயுர்வேத வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இசுறுபாயவில் ஆயுர்வேத வர்த்தக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பொது நகரங்களில் ஆயுர்வேத மருந்தகங்களை ஆரம்பிக்கவும் ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு ஆயுர்வேத வைத்திய முறைகளின் மூலம் நோய்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு அமைவாக நோய் நிவாரணம் தொடர்பாகவும் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை இதய நோய், நீரிழிவு, தொற்று அல்லாத நோய்கள் என்பவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய ஆயுர்வேத போதனாவைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பி.தென்னக்கோன் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# கொடையாளி ஆக்கும் சந்திரபகவான்

சந்திரபகவான் எந்தெந்த இடங்களில் இருந்தால் எவ்வித பலன்கள் தருவார் என்பதில் ஒவ்வொரு ஜோதிட நூலுக்கும் இடையே சிறிய வித்தியாசமுள்ளது.

பொதுவாக வளர்பிறை சந்திரன் சிறப்பான பலன்களையும், தேய்பிறை சந்திரன் அதில் பாதி பலன்கள் அல்லது பிரச்சினைக்குரிய பலன்களையும் கொடுப்பார். சுப கிரகத்தால் பார்க்கப்பட்ட சந்திரன் சுப கிரகத்துடன் சேர்ந்த சந்திரன் அதிக பலத்தை அடைகிறார்.

நீச்சக்கிரகம் அல்லது பாப கிரகத்துடன் சேர்ந்து சந்திரன், பாபகிரகத்தால் சேர்க்கப்பட்ட சந்திரன் பிரச்சினைக்குரிய பலனை உண்டு பண்ணுகிறார்.

ஜாதகர் ஜனித்த ஜென்ம லக்னத்தில் இருக்கக்கூடிய சந்திரன் நல்ல சரீரத்தையும் ஆயுளையும், தைரியத்தையும், செல்வம் சேர்ப்பதில் ஆர்வமும் கொடுப்பார். சந்திரன் பலம் குறைந்திருந்தால் மாறுபட்ட பலன் உண்டாகும்.

சந்திர பகவான் இரண்டாம் இடத்தில் இருந்தால் நிறைந்த சொத்துக்களையும், நல்ல வித்தையையும் எதிலும் நாட்டத்தையும் கொடுப்பார். ஆனால் உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் சிறிய குறை உண்டாகும்.

பூரண பலம் பெற்று மூன்றாம் இடத்தில் சந்திர பகவான் இருந்தால் திறமையான சகோதரனையும் அல்லது சகோதரியையும், கீர்த்தியையும், மிகுந்த தைரியத்தையும் கொடுப்பார்.

ஜென்ம லக்னத்தில் இருந்து நாலாம் இடத்தில் சந்திரன் இருந்தால் திறமையால் சௌகரியத்தை அடைவார். நினைந்த பொருள் வரக்கூடும். மற்றவர்களுக்கு கொடுப்பதில் பெருமை உடையவராக இருப்பார். நூதன வாகனங்கள் இவரைத் தேடி வரும். நிறைய நண்பர்கள் இருப்பார்கள்.

சந்திரன் பலம் குறைந்திருந்தால்,தாய், தாய்வழி உறவுக்கு கெடுதலையும்,மன வருத்தத்தையும் கொடுப்பார்.

ஐந்தாம் இடத்தில் சந்திரன் இருந்தால் கற்பனை வளம் மிக்க புத்திரன் அல்லது புத்திரி உண்டாவார்கள். எதையும் நிதா னித்து யோசித்து செய்வார்கள்.

ஆறாம் இடத்தில் சந்திர பகவான் இருந்தால் அவசரப்பட்டு செய்யும் செயல்களால் தொல்லைகளை சந்திப்பார். வியாதிகள் உண்டானாலும் அதை ஜெயித்து விடுவார். கடன் உண்டாகும். ஆனால் தன் திறமையால் அதை ஜெயிப்பார். வயிற்றுத் தொல்லை உண்டு. ஏழாம் இடத்தில் சந்திர பகவான் வீற்றிருக்க திறமையானவராக வும், மற்றவர்களை கவரக்கூடிய பேச்சு, தோற்றம் உடையவராகவும் விளங்குவார். திருமண விடயத்தில் மறை முகமான சிறிய தொந்த ரவுகளை சந்திப்பார்.சந்திரன் எட்டாம் இடத்தில் மருத்துவ செல வுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். சந்திரன் பலம் குறைந்தால் தண்ணீரால் கண்டம் உண்டாகும். மன தளவில் தளர்ச்சி, பயம் இருக்கும்.

9ஆம் இடத்தில் சந்தி ரன் இருந்தால் நல்லது செய்யக் கூடிய பரந்த எண் ணமும், தர்ம சிந்தனையும்,மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடிய கொடைகுணமும் உண்டு. மகன் அல் லது மகளால் புகழ் பெறுவார். எடுத்த காரியத்தில் கடைசிவரை போராடி வெற்றியடையவார்.

பத்தாம் இடத்தில் சந்திர பகவான் இருந்தால்,மற்றவர்களுக்கு பயன்தரக் கூடிய செயல்களை செய்பவராகவும் நல்ல வர்களால் விரும்பப்படக்கூடியவர்களாகவும் கடல் பிரயாண இலாபங்களையும் அடைவார்.

பதினொன்றாம் இடத்தில் சந்திர பக வான் இருந்தால் விட்டுக்கொடுக்கக்கூடிய மனபாவம் உள்ளவராகவும் ,நல்ல வேலைக்காரர்கள் மற்றும் தீர்க்க ஆயுளைப் பெற்றவராகவும் விளங்குவார்.

சந்திரன் பன்னிரெண்டாம் இடத்தில் இருந்தால் மற்றவர்களால் குறைத்துப் பேசக்கூடியவராகவும் அதில் விரயத்தை உடையவராகவும் எதிலும் நிதானமாக செயல்படக்கூடியவராகவும் விளங்குவார்.

சந்திரபகவான் பொதுவாக கற்பனை வளத்திற்கு அதிகாரியாக விளங்குகிறார். புண்ணிய நதிகளில் குளித்தல், மற்றவர் களைக் கவரக்கூடிய தோற்றம், அழகிய கண்கள் ,அற்புதமான செயல்கள்,கவிதை , கட்டுரை, பாடல் இவற்றையெல்லாம் சந்திர பகவான் வாரி வழங்குகிறார்.

பொதுவாக உச்சத்திலிருக்கும் கிரகங்கள் பலம் பெற்றதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. சந்திர பகவானுக்கு வளர்பிறை பலமும் சூரியனுக்கு திக் பலமும் உயர்ந்ததாகும்.

மூலத்ரி கோணத்தில் உச்சத்தில் இருக்கும் பலனை விட முக்கால் பங்கு பலனை



கொடுப்பார். ஆட்சியில் இருக்கும் போது உச்சத்தில் பாதி பலனைக் கொடுப்பார். நீச்சம் அடையும் போதோ சத்ரு வீட்டில் இருக்கும் போதோ தன் பலத்தை இழக்கிறார்.

ஜென்ம லக்கனத்தில் இருக்கும் போது கேந்திர பலத்தின் முழு பலத்தையும் நாலாம், இடத்தில் அதில் கால் பங்கு பலனையும் பத்தாம் இடத்தில் அரை பங்கு பலத்தையும்,ஏழாம் இடத்தில் முக்கால் பங்கு பலனையும் கொடுக்கிறார்.பொதுவாக கிரகங்களுக்கு ,ஏழாம் இடத் துப் பார்வையே முழு பலன் தரும் பார்வை யாக சொல்லப்பட்டுள்ளது.

## கட்டாரில் தற்கொலை செய்த இலங்கைப் பெண்ணின் சடலத்தை கொண்டுவருவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கட்டாரில் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படும் இலங்கைப் பணிப் பெண்ணின் சடலத்தை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

வீட்டுப் பணிப்பொண்ணாக கடமையாற்றிய 21 வயது யுவதி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாகவும் குறித்த பெண் தமக்குத் தாமே தீ மூட்டிக்கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக கட்டார் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த பெண்ணின் சடலத்தை கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித் துள்ளது.

உயிரிழந்த பெண் மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தனிப்பட்ட பிரச்சினை ஒன்றினால் இந்தப் பெண் தற்கொலை செய்து கெண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.(ஸ்ரீ-2)

## இலங்கை-இந்திய கடற்படை அதிகாரிகளுக்கிடையில் பேச்சுவார்த்தை

இலங்கை, இந்திய கடற்படை அதிகாரிகளுக்கிடையில் விசேட பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய, இலங்கை மீனவர்கள் அத்து மீறி கடல் எல்லைகளுக்குள் பிரவேசிப்பதால் ஏற்படும் பிணக்குகள் தொடர்பில் இந்த பேச்சுவார்த்தைகளின் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாணத்திற்குப் பொறுப்பான கடற்படைக்கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் துசித்த வீரசேகர தலைமையிலான குழுவினர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை இந்திய கடற்பரப்பில் இந்திய கப்பல் ஒன்றில் வைத்து இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்திய கடற்படையினர் இந்த அவசர பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்துள்ளதாகவும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசம் பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளதென கடற்படைத் தளபதி திசர சமர சிங்க அண்மையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாராந்தம் ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 200 இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

ஐரோப்பிய நாடுகளை விட இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி அதிகாரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் மந்த நிலையில் உள்ள போதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகமானது சீரான வேகத்துடன் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெண்களின் பங்கு அதிகம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மட்டக்களப்பில் பௌத்த பிக்கு உண்ணாவிரத போராட்டம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தம்மை அவமானப் படுத்தியதாக தெரிவித்து மட்டக்களப்பு பௌத்த பிக்கு ஒருவர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மங்களாராமய விஹாரையின் பிரதம பிக்குவான சுமன தேரரே இந்தப் போராட்டத்தை ஆரம்பத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கடந்த காலங்களில் சுமன தேரர் பல தடவைகள் பேராட்டங்களையும் உண்ணா விரதப் போராட்டங்களையும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)







யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்ட பயிற்சியாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரிகேடியர் எப்.றொட்டிக்கோ உரையாற்றுவதையும் நினைவுப் பரிசினை பிரிகேடியர் எப்.றொட்டிக்கோவிடம் இருந்து பயிற்சியாளர் சங்க உறுப்பினர் ஜெசி கம்சி பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்.கரன் )

# தாய்லாந்து பிரதமரின் வீட்டின் அருகில் குண்டுவெடிப்பு

தாய்லாந்து நாட்டின் பிரதமரான அபிசித் வெஜாஜிவா பதவி வகித்து வருகிறார். இவருக்கு எதிராக பாங்கொக்கில் எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தை இராணுவம் அடக்கியது. இருந்தும் ஆங்காங்கே போராட்டங்கள் மற்றும் வன்முறைகள் நடைபெற்று வருகின்றது.

பாங்கொக் நகரில் உள்ள அரச கட்டடங்கள் மற்றும் அலுவலகங்கள் மீது வெடி குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த இரு நாட்களுக்கு முன்பு கூட பாங்கொக் நகரைச் சுற்றி இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்தது. இதில் 3 பேர் காயமடைந்தனர். பிரதமர் அபிசித் வெஜாஜிவாவின் வீடு பாங்கொக் அருகே மாங்கிலியாங் ஹாஸ்டேபிள் என்ற இடத்தில் உள்ளது. நேற்று முன்தினம் காலை 12.30 மணியளவில் இந்த வீட்டின் அருகே உள்ள விளையாட்டு அரங்கில் குண்டு வெடித்தது. இதில் விளையாட்டரங்கின் சுவர் அதன் அருகே உள்ள பாலம் என்ப சேதமடைந்தன. இத்தகவல் அறிந்ததும் அங்கு பொலிஸார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அங்கு வெடித்தது நாட்டு வெடிகுண்டாகும்.

இது யூரியா உரம், டீசல் மற்றும் மெட்டல் துண்டுகளால் தயாரிக்கப்பட்டிருந்தது. அவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குண்டு வைத்தவர்கள் யார் எனத் தெரியவில்லை எனவும் அவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகளின் குண்டுவீச்சுக்கு 30 பேர் பலி

பாகிஸ்தானில் பன்னாட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் 30 பேர் பலியாகினர். இதில் பெரும்பாலானோர் தீவிரவாதிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் -பாகிஸ்தான் எல்லையில் தீவிரவாதிகளின் முகாம்களைக் குறி வைத்து அமெரிக்கா மற் றும் பன்னாட்டுப்படைகள் அண்மைக்கால மாக தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் கொல்லப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது ஆப் கானிஸ் தான் நாட்டை ஒட்டியுள்ள கோல்ட் என்னும் இடத்தில் நேற்று திடீரென்று அந்நாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தின. இரண்டு ஹெலிகொப்டர்களில் இராணுவத்தினர் அந்தப் பகுதியில் சரமாரியாக குண்டு களை வீசியதில் 30 பேர் பலியாகியதுடன் ஏராளமானோர் படுகாயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானோர் தீவிரவாதிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஜெர்மனியில் சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் 12 பேர் பலி

ஸ்பெயின் சென்று திரும்பிக்கொண்டிருந்த போலந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பேருந்து ஒன்று ஜெர்மனியின் நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானதில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் படுகாயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலம் ஒன்றின்மீது சென்று கொண்டிருக்கும் போது காருடன் மோதி கட்டுப்பாட்டை இழந்ததால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக தீயணைப்புப் படைப் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

விபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகளுக்காக 300 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரெனவும் மேலும் காயமடைந்தோர் ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனப் போலந்து ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விபத்தில் காயமடைந்தோரில் இருவர் சிறுவர் எனவும் பேருந்து கார்ச் சாரதிகள் படுகாயங்களுக்குள்ளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கார் வாகன சாரதி ஒரு பெண் (வயது 37) என்பதும் ஜெர்மனியில் இவ்வாறான வீதி விபத்துக்கள் மிகவும் அபூர்வமாகவே இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சீனாவிடம் மன்னிப்பு கேட்க ஜப்பான் பிரதமர் மறுப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் கட்டுப்பாட்டில் உள்ள சென்காகு என்ற தீவுக்கு சீனாவும் சொந்தம் கொண்டாடி வருகிறது. இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏறபட்டு வருகிறது. இந்தத் தீவுக்கு மீன்பிடி படகில் சென்று ஜப்பானின் ரோந்து கப்பல் மீது மோதிய சீன மீனவரை கடந்த 8ஆம் திகதி ஜப்பான் அதிகாரிகள் கைது செய்தனர்.

கடந்த 25ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட அவர் சீனாவுக்கு நேற்று முன்தினம் சென்று அடைந்தார். அவரை சட்டவிரோதமாக கைது செய்ததற்காக மன்னிப்புக் கேட்கும்படியும் நஷ்டஈடு வழங்கும்படியும் ஜப்பானை சீனா வலியுறுத்தி வருகிறது.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஜப்பான் பிரதமர் நயடோ கான் நேற்று முன்தினம் திட்டவட்டாக நிராகரித்தார். (ஸ்ரீ-2)




# பாகிஸ்தானின் பாதுகாப்பு ஆயுத உற்பத்திக்கான அமைச்சர் இராஜினாமா



பாகிஸ்தானின் பாதுகாப்பு ஆயுத உற்பத்திக்கான அமைச்சர் அப்துல் கையூம் ஜட்டோய் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் இராணுவத்தினரை கடுமையாக விமர்சித்ததாகவும் இதனாலேயே அவர் பதவி விலகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நாட்டைப் பாதுகாப்பதற்கா கவே இராணுவத்தினருக்கு சம்பளம் வழங்கப்படுவதுடன் அரசியல் படுகொலைகளுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை எனவும் கடந்த 25ஆம் திகதி ஊடகவியலாளர்களி டம் அப்துல் கையூம் ஜட்டோய் தெரிவித்திருந் தார்.

இது பாகிஸ்தான் தொலைக்காட்சிகளில் வெளியாகியிருந்ததுடன் இது தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஸா கிலானி விளக்கம் கோரியிருந்ததையடுத்தே அமைச் சர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டெங்கு காய்ச்சலுக்கு தடுப்பூசி

(மெல்பேர்ன்)

டெங்கு காய்ச்சலுக்கு அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தடுப்பு ஊசியை கண்டு பிடித்துள்ளனர் இந்த மருந்து விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

நுளம்புகளால் பரவக்கூடிய நோய்களில் மோசமானது டெங்கு வைரஸ் கிருமியால் ஏற்படும் இந்தக் காய்ச்சல் பொதுவாக குழந்தைகளையே அதிகம் தாக்குகிறது.

இந் நிலையில் மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள டெலிடோன் குழந்தைகள் நல ஆய்வு மைய விஞ்ஞானிகள் டெங்கு காய்ச்சலுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் இப்போது அவர்களின் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.


சோதனை முறையில் தடுப்பு ஊசி பரிசோதனை வெற்றி பெற்றுள்ளது. எனவே இனி டெங்கு காய்ச்சல் குறித்த பயம் தேவையில்லை என்று விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் பீட்டர் ரிச்மோன்ட் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உலகிலேயே மிகப்பெரிய சிறுநீரகம் அகற்றம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெண் ஒருவரது உடலில் இருந்த பெரிய சிறுநீரகத்தை டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர். அந்த சிறுநீரகம் 1.8 கிலோ எடை இருந்தது. சாதாரணமாக மனித சிறுநீரகம் 120 தொடக்கம் 150 கிராம் வரை எடையுள்ளதாக இருக்கும்.

இது உலகிலேயே பெரிய சிறுநீரகம் என கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற் றுள்ளது. பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகா ணத்தில் உள்ள வைத்தியசாலையில் கடந்த ஜனவரி மாதம் இந்தப் பெரிய சிறுநீரகத்தை அகற்றும் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அளவுக்கு அதிக மான எடையுடன் இருந்ததால் அந்தச் சிறுநீரகம் செயலிழந்து விட்டது. அப் போதே கின்னஸ் புத்தக நிறுவனத்துக்கு இது தொடர்பான விபரம் அனுப்பி வைக் கப்பட்டது. இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



நேபாள நாட்டின் பிரதமர் தெரிவுக் கூட்டம் எட்டாவது முறையாக தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது. இம்முறையும் எந்த தீர்வும் ஏற்படாததால் பிரதமர் வேட்பாளராக போட்டியிட்ட நேபாளக் காங்கிரஸ் தலைவர் ராம் சந்திர பவுடல் (வலது) சோகத்துடன் வெளியேறினார்.

# மக்களின் இரட்சகனாக பாகிஸ்தானுக்கு திரும்புவேன்

## முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

(லண்டன்)


பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் பதவி இழந்த பின் கடந்த 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தனில் இருந்து வெளியேற்றப்பட்டார். தற்போது அவர் லண்டனில் தங்கி உள்ளார்.

அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்ற கட்சியை தொடங்கினார். இதைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஆட்சியில் அமருவேன் என தெரிவித்தார். ஆனால் கட்சியின் தொடக்க விழாவில் தலைவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் அவர் கட்சிக் கொள்கைகளை வெளியிட்டு பேசினார். அப்போது பாகிஸ்தானில் அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும். கடந்த மாதம் அங்கு வெள்ளத்தில் 2 கோடி மக்கள் பாதிக்கப்பட்டனர்.

ஆனால், அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் அரசு நிவாரணப் பணிகளை இதுவரை மேற்கொள்வில்லை. மக்களின் தேவைகள் தீர்க்கப்படவில்லை.

அரசியல் இராணுவம் மற்றும் அதிகாரி




கள் ஆகிய அமைப்புகளிடையே ஒற்றுமையில்லை. அவர்கள் தன்னிச்சையாக செயற்படுவதனால் நிர்வாகத்தில் சீர்கேடு நிலவு கிறது.

பதவியில் இருந்த போது நான் ஒரு போதும் சர்வாதிகாரியாக நடந்து கொண்டதில்லை. இருந்தாலும் என்னை மக்கள் அவ்வாறு அழைத்தனர்.

ஆனால், ஒரு அரசியல்வாதியாகதான் மீண்டும் நான் பாகிஸ்தா னுக்கு திரும்புவேன். நான் ஒரு மக்கள் தொண்டன். மக்களையும் பாகிஸ்தானையும் காக்கும் இரட்சகனாக திகழ்வேன். இவ்வாறு அவர் பேசினார். (ஸ்ரீ)

# தஞ்சைப் பெருங் கோவிலுக்கு வயது ஆயிரம் ஆண்டுகள்



'அது இராஜராஜ சோழனுடைய திமிரின் உச்சம் என்கிறார் தஞ்சையைச் சேர்ந்த கவிஞர் யுகபாரதி'

அவர் குறிப்பிடுவது ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் உயர்ந்து நிற்கும் தஞ்சாவூர் பெரிய கோவிலைத்தான்.

மாமன்னர் இராஜராஜ சோழனுடைய ஞானச் செருக்கு எனும் கலைத் திமிரின் உச்சமாக இக் கோவில் உயர்ந்து நிற்பது உண்மைதான் என்பதை அரசு சார்பில் நடைபெறும் கோலாகலமான கொண்டாட்டமும் அதற்குக் கூடுகின்ற மக்கள் பெரும் கூட்டமும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

தஞ்சையின் முக்கிய இடங்களில் சங்கமம் நிகழ்ச்சிகள் களைகட்ட, பெரிய கோவிலின் உள்ளே ஆயிரம் நடனக் கலைஞர்களின் பரதம், இன்னிசை, சொற்பொழிவு என நயம் சேர்க்க,

ஆயுதப் படைக் காவலர் மைதானத்தில், முதல்வர் பங்கேற்கும் அரசு நிகழ்சிகள் ஏற்பாடாக... உற்சாக உற்சவத்தில் திளைக்கின்றார்கள் பக்தர்களும் பொதுமக்களும்.

இத்தனை சிறப்புக்களுக்கிடையிலும் சின்னதாக ஒரு சென்ரிமென்ட் உணர்வுடன் பலரும் ஒரு விடயத்தைப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க முடிகின்றது.

அது தஞ்சைப் பெரிய கோவிலுக்குள் வந்தாலோ, கோவில் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலோ பிரபலங்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படும் என்கின்ற சென்டிமென்ட் தான்.

கி.பி. 985 முதல் 1014 வரை ஆட்சிசெய்த முதலாம் இராஜராஜ சோழனால் 1010 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட தஞ்சைப்பெரிய கோவில், அந்த மன்னன் பெயராலேயே இராஜராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது.

29 ஆண்டுகள் பேரரசனாக ஆட்சி செய்த இராஜராஜன் தனது 25-வது ஆண்டு ஆட்சியின்போது இக் கோவிலைக் கட்டி முடித்துக் குடமுழுக்குச் செய்தான்.

அதற்கு முன் ஈழம், முந்நீர்ப்பழந்தீவு, பன்னீராயிரம் ஆகியவற்றைத் தன் வலிமை மிகுந்த கடற்படையால் வெற்றி கொண்டான். கலிங்கம், மைசூர், கேரளம் உள்ளிட்ட பகுதிகளில் நடந்த போர்களிலும் பெரு வெற்றி பெற்றிருந்தான்.

பெரிய கோவில் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அவன் ஆட்சி செய்தது 4 ஆண்டுகளே. அத்துடன் தன் உடல் நிலையைக் கருதி 1012 ஆம் ஆண்டில், அதாவது கோவில் கட்டி முடிக்கப்பட்ட 2 ஆண்டுகளில் தன் மகன் இராஜேந்திர சோழனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி ஆட்சி அலுவலகப் பொறுப்புக்கள் பலவற்றை ஒப்படைத்து விட்டான் என்கின்றார்கள் வரலாற்று ஆய்வாளர்கள்.

இதைத்தான் சென்டிமென்ட்டாக பார்க்கின்றார்கள் ஆன்மீகவாதிகள். மத்திய அரசின் அனுமதி கிடைக்காததால் 1972 இல் இராஜராஜசோழன் சிலையை கோவிலுக்குள் நிறுவ முடியாமல் வெளியில் அமைத்தது கலைஞர் அரசு.

## ஆட்சியாளர்கள் பெரிய கோவிலுக்குச் சென்றால் அவர்கள் ஆயுள் முடிந்து விடும் என்பது உண்மையா?

கோவில் சென்ட்டிமென்ட்தான் இராஜராஜனை வீதியில் சிலையாக நிற்க வைத்து விட்டது என்கின்ற ஆன்மீகவாதிகள் சோழ நாட்டில் உள்ள பல கோவில்களுக்குத் திருப்பணி செய்து கொடையளித்தான் இராஜராஜன்.

அப்போதெல்லாம் அவனது புகழும் ஆட்சியும் பரவியது. சிவபாதசேகரன் எனப் புகழப்பட்ட இராஜராஜன், பெரிய கோவில் கட்டப்பட்ட பிறகு நான்கே ஆண்டுகளில் சிவபாதத்தை சேர்ந்து விட்டான்.

பேரரசனுக்கே இந்த நிலை ஏற்பட்டதால்தான் இன்றைய ஆட்சியாளர்களும் அதிகாரத்தில் பங்குபற்றியிருப்பவர்களும் இந்தக் கோவிலுக்கு வருவதற்குத் தயங்குகின்றார்கள்.

1984 ஆம் ஆண்டில் நடந்த இராஜராஜ சோழன் சதய விழாவில் (பிறந்த நாள்) அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியும் முதல்வர் எம்.ஜி.ஆரும் கலந்து கொண்டார்கள்.

அதையடுத்து சில வாரங்களில் எம்.ஜி. ஆர். சிறுநீரகக் கோளாறாலும் பக்கவாதத்தாலும் பாதிக்கப்பட்டு நினைவிழந்தார். இந்திரா காந்தி அம்மையார் அவரது மெய்க் காப்பாளர்களாலேயே சுடப்பட்டு மரணமடைந்தார்.

அரசியலிலும் மக்கள் செல்வாக்கிலும் மிகப் பெரும் சக்திகளாக விளங்கிய இருவருக்கும் ஏற்பட்ட பாதிப்பு மற்றவர்களை யோசிக்க வைக்கின்றது.


முதல்வர் பங்கேற்கும் அரசு சார்பிலான நிகழ்ச்சி கூட கோவிலுக்குள் நடைபெறாது வெளியிலுள்ள மைதானத்தில் செற் போடப்பட்டு நடைபெறுகின்றது என்கின்றார்கள்.

விழா ஏற்பாட்டாளர்களோ 1997 இல் பெரிய கோவில் கும்பாபிஷேகத்தின்போது யாகசாலையில் தீ விபத்து ஏற்பட்டுப் பலர் இறந்தார்கள். உடனடியாக முதல்வர் கலைஞர் சென்னையிலிருந்து புறப்பட்டு தஞ்சைக் கோவிலுக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

இப்போதும் கூட்ட வசதிக்காகத்தான் இங்கே மேடை அமைக்கப்பட்டிருக்கின்றது. கோவிலுக்குள் நடைபெறும் நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் கலந்து கொள்கின்றார்கள் என்கிறார்கள்.

கோவில் சாஸ்திரம் அறிந்தவர்களாகக் கூறிக் கொள்வோர் பெரிய கோவிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள மிகப் பெரிய சிவலிங்கத்துக்குப் பலவித சக்திகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் அந்த சக்தியை சரியான படி



பூட்டி வைக்கவில்லை. அதனால் சக்தி லீக் ஆகின்றது. அதனால்தான் தஞ்சைப் பெரிய கோவிலுக்குள் சென்றால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் இதேபோன்றுதான் சக்தியைப் பூட்டி வைக்காமல் விட்டிருக்கின்றார்கள். உரிய பரிகாரங்களும் பூசைகளும் செய்து இந்த சக்தியைப் பூட்டி வைக்க முடியும்.

ஆனால் தற்போதுள்ள சமூக அமைப்பு அதற்கு அனுமதிப்பதில்லை என்கின்றார்கள். தஞ்சை பெரிய கோவிலுக்குச் சென்றால் பாதிப்பு ஏற்படுமா? என்று தஞ்சையில் 4 முறை எம்.எல்.ஏ.ஆகவும் தமிழக வணிக வரித் துறை அமைச்சருமான எஸ்.எம்.என். உபய துல்லாவிடம் கேட்டோம்.

ஏதோ ஒரு நேரத்தில் எதிர்பாராமல் நடந்தவற்றை வைத்துக் கொண்டு ஆட்சியாளர்களுக்கும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் ஆபத்து என்று சொல்வது சரியானதல்ல.

எம்.எல்.ஏயாக, அமைச்சராக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நான் பல முறை பெரிய கோவிலுக்குச் சென்று வந்திருக்கின்றேன்.

என் அரசியல் வாழ்வில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றதே தவிர, ஒரு போதும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. வருடந்தோறும் நடைபெறும் சதய விழாவில் மாநில அமைச்சர் கோ.சி. மணி, மத்திய இணை அமைச்சர் பழனி மாணிக்கம் உள்ளிட்டோர் பல ஆண்டுகளாகக் கலந்து கொண்டு வருகின்றார்கள்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின்போதும் அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். கலக்டர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கோவில் விழாக்களில் தொடர்ந்து பங்கேற்கின்றார்கள்.

அதனால் வீண் வதந்திகளை நம்ப வேண்டியதில்லை. சமீப காலமாக பிரதோஷ வழிபாடு என்பது பெரிய கோவிலில் சிறப்பாக நடைபெறுகின்றது.

இதற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிக்கின்றார்கள். கோவிலுக்குள் இட நெருக்கடி ஏற்படுகின்ற அளவுக்கு கூட்டம் கூடுகின்றது.

பாதிப்பு ஏற்படும் என்றால் பக்தர்கள் வருவார்களா? என்ற அவரிடம், கோவிலைக் கட்டிய 4 ஆண்டுகளில் இராஜராஜசோழன் மரணமடைந்ததை சென்டிமென்டாக கூறுகின்றார்களே என்றோம்.

அதற்கு, மரணம் எல்லோருக்கும் வருவதுதான். ஆனால் கோவில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் வரலாற்றில் இராஜராஜசோழன் வாழ்ந்து கொண்டுதானே இருக்கின்றான்.

அவனுடைய பெருமையை நாம் பேசுவதற்கு பெரிய கோவில்தானே காரணம் என்றார் அமைச்சர்.

செண்டிமெண்ட் சர்ச்சையை மீறி, தஞ்சை பெரிய கோவிலில் ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவை மக்கள் கூட்டமும் அரசு இயந்திரமும் கோலாகலமாக்கியிருப்பதைத் தஞ்சை நகர் முழுக்க காண முடிந்தது.

– லெனின், பகத்சிங்

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின் அதை நன்றாகச் செய்து முடியுங்கள். – ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உதவி ஆசிரியர்களுக்கு உதவும் தார்மீகப் பொறுப்பு

தொண்டர் ஆசிரியர்களாக பல வருடங்கள் கடமையாற்றியவர்களுக்கு "உதவி ஆசிரியர் நியமனம்" வழங்கப்பட்டது.

பல போராட்டங்கள், கூட்டங்கள், அறிக்கைகள், காத்திருப்புகள் என்ற மிகப் பெரியதொரு கள முனையில் நின்றே அவர்கள் அந்த நியமனத்தைப் பெற்றனர்.

நியமனம் "உதவி ஆசிரியர்" என்று வழங்கப்பட்டிருந்தாலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பயிற்சி அல்லது வெளிவாரியாகப் பட்டத்தை பூர்த்தி செய்தல் என்ற நிபந்தனைகளின் கீழ் அவர்கள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர் நியமனம் வழங்கியமை பெரும் காரியம்.

இருந்தும் அவர்களின் மாதச் சம்பளம் மூவாயிரம் ரூபாய் மட்டும் எனும் போது கடவுளே! என்று நா முணுமுணுக்கிறது. மாதச்சம்பளம் மூவாயிரம் ரூபாயுடன் சீவியம் நடத்துவது முடியாத காரியம் என்பது தெரிந்த விடயம்.

எனவே அவர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவுக்காக "ரியூசன்" கலாசாரத்தில் அல்லது தனிப்பட்ட கற்பித்தலில் ஈடுபடவேண்டிய தேவை இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

இதற்காக அவர்கள் சனி, ஞாயிறு தினங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்வர்.

நிலைமை இதுவாக இருக்கும் போது, இவர்களுக்கான ஆசிரிய வாண்மை விருத்திப் பயிற்சியை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில், தொலைக்கல்வி மூலம் சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதன் பிரகாரம் மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளத்துடன் கிழமை நாட்கள் முழுவதும் பாடசாலையில் கற்பித்தல் பணியிலும், வார இறுதி நாட்களில் தொலைக்கல்விப் பயிற்சியிலும் ஈடுபட வேண்டும்.

எப்படி இருக்கிறது நிலைமை. யதார்த்தம் புரியாத சிந்தனைகள் இருக்கும் வரை மனிதங்கள் சிதைபட்டுப் போகும் என்பது நம் பித்தளை மொழி.

பொன்மொழிகளுக்கு பழக்கப்பட்டுப் போனவர்கள் நம் பித்தளை மொழியை தூக்கி எறியலாம். இருந்தும் சொல்லவேண்டியவற்றை சொல்லி விடுவது பாவ பழியிலிருந்து விடுபடும் "விதுர(ன்) கலாசாரம்" ஆகையால் ஆசிரிய உதவியாளர்களுக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் சம்பளத்துடனான முழுநேர வாண்மைப்பயிற்சியை அல்லது யாழ்ப்பாணத்தில் இயங்கும் இரண்டு ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரியப் பயிற்சியை வழங்கலாம் அல்லவா?

ஆழ்ந்து சிந்தியுங்கள். ஆவன செய்யுங்கள்.

# அகதி முகாமிலுள்ள பார்வையற்ற இளைஞரின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணைக்கு

(கொழும்பு)

தான் அகதி முகாமில் முடக்கப்பட்டு வைத்திருப்பதாக கண்பார்வையற்ற குடும்பஸ்தர் ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

எதேச்சாதிகார கைது மற்றும் தடுத்துவைப்பு ஆகியன தொடர்பான மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே உயர் நீதிமன்று இந்த அனுமதியை வழங்கியது. இந்த மனுமீதான அடுத்த விசாரணை எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரரான ஸ்ரீ செல்வன் அன்டன் ஜூட்ஸ் என்பவர் பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவின் பிரகாரம் கைது செய்யப்பட்டதாகவும் தற்போது அவர் பூஸா தடுப்புக் காவல் முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த யூலை 19 ஆம் திகதி சிரேஷ்ட அரச சட்டத்தரணி நீதிமன்றுக்குத் தெரிவித்தார்.

இந்த மனு நீதியரசர்களான ஷிரானி ஏ.பண்டாரநாயக்கா மற்றும் என்.ஜி.அமரதுங்க, எஸ்.ஐ.இமாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

கடந்த யூலை 19 ஆம் திகதி இந்த மனு மன்றில் விசாரணைக்கு வந்த போது சிரேஷ்ட அரச சட்டத்தரணி றியாஸ் ஹம்ஸா கூறுகையில், மனுதாரர் அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் அகதிகள் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மேல் நீதிமன்றத்தினால் திரும்பப் பெறப்பட்டிருப்பதால் அவரை எவ்வாறு குற்றத்தீர்ப்புப் பெற்றவராக வைத்திருக்கமுடியும் என்று அப்போது பிரதம நீதியரசர் கேள்வி எழுப்பியிருந்தார்.

மேல் நீதிமன்றத்தினால் சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்ட போதும் தான் தொடர்ந்தும் அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனுதாரர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஓமந்தை அகதிகள் முகாமில் வைக்கப்பட்டிருக்கும் மனுதாரர் இறுதிக்கட்டயுத்தத்தின் போது தனது குடும்பத்துடன் இடம்பெயர்ந்தோருக்கான செட்டிக்குளம் நலன்புரி நிலையத்திற்கு வந்து சேர்ந்ததாகவும் பின்னர் ஜீவநகர் நலன்புரி நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தனது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

அங்கு வைத்து தனது குடும்பத்தவர்களை செல்ல அனுமதித்த அதிகாரிகள் தன்னைமட்டும் போக அனுமதிக்க வில்லை என்று அவர் முறையிட்டுள்ளார். தான் குற்றத்தண்டனை அளிக்கப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கைதிகள் பரிமாற்றத்தின் போது தான் விடுவிக்கப்பட்டதாகவும் பிழையான காரணத்தைக் காட்டி அதிகாரிகள் தன்னை கைது செய்துள்ளனர் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். (ச-5)

## க.பொ.த.சாதாரண தர மாணவர்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும் என ஆட்பதிவுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதன் மூலம் கால தாமதமின்றி தேசிய அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜெகத் விஜய வீர கூறியுள்ளார்.

சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய சனிக்கிழமைகளிலும் ஆட்பதிவுத் திணைக்கள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் 60 உத்தியோகத்தர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டதாகவும் ஆட்பதிவு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 5ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் ,ஆட்பதிவு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சாதாரணதர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பாடசாலையின் அதிபர்கள் ஊடாக விண்ணப்பங் களை அனுப்பி வைக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-3)

## கரடியனாறு வெடிப்புச் சம்பவம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது

### எதிர்க்கட்சிகள் சந்தேகம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலைய வெடிப்பு சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் எதிர்க்கட்சிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தற்செயலாக இடம்பெற்ற ஒன்று என அரசாங்கம் தொடர்ந்து கூறிவருகிறபோதிலும் இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என எதிர்க்கட்சியின் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வெடி பொருட்கள் சீன நிறுவனத்துக்கு சொந்தமானது என்ற வகையில் அவற்றை கையாள்வதற்கு பயிற்றப்பட்ட சீன அதிகாரிகளே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனவே, இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பொலிஸ் நிலையங்களை கண்காணிக்க விசேடகுழு

பொலிஸ் நிலையங்களினதும் பொலிஸ் செயற்றிட்டங்களினதும் முறைகேடுகள் வினைத்திறனற்ற தன்மை ஆகியவற்றை கண்காணிப்பதற்காக பொலிஸ் மீளொழுங்கு கண்காணிப்பு குழுவொன்றை பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய உருவாக்கியுள்ளார்.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தலைமையில் இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே அதன் பிரதி தவைராகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவி வித்யாலங்கார அதன் செய லாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு பொலிஸ் நிலையங்களில் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ப்படுவதில்லை என பொது மக்களிடமிருந்து பல முறைகேடுகள் கிடைத்துள்ளன. அத்துடன் பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வினைத்திறனற்ற பல திட்டங்கள் பற்றியும் எமக்கு அறிவிக்கப் பட்டுள்ளது என பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

இத்தகைய பொலிஸ் நிலையங்களுக்கு நாம் திடீர் விஜயங்களை மேற்கெள்வோம். வினைத்திறனற்ற தன்மையை முறியடிப்பதே இதன் நோக்கம். மக்களுக்கு சிநேகமான தொழில்ஸார் பொலிஸ் சேவையை வழங்குவதே எமது தொனிப் பொருளாகும் எனவும் அவர் கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் இது தொடர்பாக அமைக்கப்பட்ட பொது மக்கள் உதவி அலுவலகத்திற்கு பொலிஸ் நிலையங்களின் குறைபாடுகள், அசட்டை தொடர்பாக ஏராளமான புகார்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் இக்குழுவின் செயலகம் அமைக்கப்படவுள்ளது.

இக் குழுவில் 9 பிரதிப் பெலிஸ்மா அதிபர்கள் ,15 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் அங்கம் வகிப்பர். (ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு




பலவீனம், தளைகள் அனைத்தும் கற்பனை. அவற்றைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னால், அவை மறைந்து ஒழிய வேண்டும் . பலவீனமடையாதீர்கள்! தப்புவதற்கு வேறு வழியில்லை.

வீரர்களாக எழுந்து நில்லுங்கள். அச்சம் வேண்டாம். மூடநம்பிக்கை வேண்டாம். உண்மையைக்கண்டு அஞ்ச வேண்டாம். மிகக் கொடிய துன்பமான மரணம் வந்தாலும் வரட்டும். நாம் இன்பமாக உயிரை விடத் துணிந்துள்ளோம்.

இந்த பிரபஞ்சத்தின் சுக துக்கங்களைப் பற்றி யாருக்குக் கவலை? இவற்றையெல்லாம் கடந்து, துணிவுடன் செல்லுங்கள். பிரபஞ்சச் சட்ட திட்டங்களுக்கு அப்பால் விரையுங்கள். பிரபஞ்சம் முழுவதும் மறையட்டும். தனியே நில்லுங்கள். நான் உண்மை. அறிவு இன்பம்! நானே அவன். நானே அவன்.

# பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசு ஆயுதங்களை விற்பது கவலைக்குரியது

## இந்திய இராணுவ அமைச்சர் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசு ஆயுதங்களை விற்பது, இந்தியாவுக்கு கவலை தரும் அம்சமாக இருக்கிறது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்தார்.

தனது உயர்மட்டக் குழுவுடன் அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி நேற்று முன்தினமிரவு வோஷிங்டன் சென்றடைந்தார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரான றொபர்ட் கேட்சை சந்திக்கவுள்ள அவர், இருநாட்டு இராணுவ உறவைப் பலப்படுத்தும் வகையில் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அத்துடன், இராணுவ ஒப்பந்தங்கள், அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவது உள்ளிட்ட உடன்பாடுகளிலும் அவர் கையெழுத்திடுவார் எனவும் தெரிகிறது.

மேலும், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹலாரி கிளின்டன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் உள்ளிட்டோரையும் அவர் தனது இரண்டு நாள் பயணத்தின்போது சந்திக்கவுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பாக, வோஷிங்டனின் நிருபர்களிடம் அந்தோணி கூறுகையில், பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதற்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குகிறது. இருந்தாலும், எங்களது அனுபவத்தில் பார்க்கும் போது, அந்த ஆயுதங்களை பாகிஸ்தான் தவறாகப் பயன்படுத்துகிறது என்றே அறிகிறோம். குறிப்பாக இந்தியாவுக்கு எதிராகவே அந்த ஆயுதங்களை பாகிஸ்தான் பயன்படுத்துகிறது.

இந்தியாவுக்கு கவலை அளிக்கும் இந்த விவகாரம் குறித்து, அமெரிக்க அரசிடம் எடுத்துரைக்கவுள்ளேன். பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை அமெரிக்கா ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்துவதன் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகிறோம்.

மேலும், அமெரிக்காவுடனான இராணுவ உறவை இந்தியா வலுப்படுத்த விரும்புகிறது என்று ஏ.கே.அந்தோணி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# காஷ்மீர் 8 அம்ச திட்டத்திற்கு பாரதிய ஜனதா கட்சி எதிர்ப்பு

(நாக்பூர்)

காஷ்மீரில் அமைதி ஏற்பட 8 அம்ச சமரச திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இராணுவப் பாதுகாப்பு சட்டத்தை தளர்த்துவது, துப்பாக்கிச்சூட்டில் இறந்த சகலரின் குடும்பத்துக்கும் ரூ.5 இலட்சம் வழங்குவது, கலவரத்தில் கைதானவர்களை விடுவிப்பது உள்ளிட்ட 8 அம்ச திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கு பாரதீய ஜனதா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பாரதீய ஜனதா செய்தி தொடர்பாளர் தருண்விஜய் கூறியதாவது,

காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்திக் கொண்டு வரப்பட்டுள்ள 8 அம்ச திட்டங்கள் சரியானவை அல்ல. இது பாதுகாப்புப் படையினரையும், தேசப்பற்றுள்ள மக்களையும் அவமதிக்கும் வகையில் உள்ளது.

2008 அமர்நாத் போராட்டத்தின்போது ஜம்முவில் 17 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் குடும்பத்துக்கூட இதுவரை நஷ்ட ஈடு வழங்கவில்லை.

ஆனால் இப்போது பாதுகாப்புப் படையினரை தாக்கியதால் கொல்லப்பட்டவர்கள் குடும்பத்துக்கு ரூ.5 இலட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வீசி தாக்கியவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

அமர்நாத் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட 50பேர் மீது இன்னும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றார். (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்

# அவுஸ்திரேலியாவில் இந்திய வாலிபர் மீது மீண்டும் இனவெறி தாக்குதல்

(மெல்பேர்ன்)

இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு மேல் படிப்புக்காகச் செல்லும் இந்திய மாணவர்கள் மீது இனவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தபவர்கள் மீது அவுஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுத்தது. எனவே தாக்குதல் ஓரளவு குறைந்து இருந்தது. இருந்தும் அவ்வப்போது இந்தியர்கள் மீது தாக்குதல் நடந்து வருகிறது.

இந்நிலையில் மீண்டும் ஒரு இந்திய வாலிபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மெல்போர்ன் நகரில் 21 வயது வாலிபரை 4 பேர் கொண்ட கும்பல் துடுப்பாட்ட மட்டையால் கடுமை யாகத் தாக்கியுள்ளனர். அப்போது அவர்கள் தன்னை நீ இந்தியாவைச் சேர்ந்தவனா? எனக் கேட்டு தாக்கியதாக, அந்த நபர் தெரி வித்துள்ளார்.

இச்சம்பவம் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் இந்தியர்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# 115 மணித்தியாலங்கள் நடனமாடி கேரளப் பெண் கின்னஸ் சாதனை

(திருச்சூர்)

கேரள மாநிலம் கலமண்டலம் என்ற ஊரைச் சேர்ந்த பிரபல மோகினி ஆட்ட நடன மங்கை ஹேமலதா, தொடர்ந்து 115 மணி நேரம் மோகினி நடனம் ஆடி சாதனை படைத்தார். திருச்சூரில் இந்த சாதனை நிகழ்ச்சி நடந்தது. ஒரு மணி நேரத்துக்கு 5 நிமிடம் மட்டும் தான் அவர் ஓய்வு எடுத்தார்.

108 மணிநேரம் நடனம் ஆடி ஐதராபாத்தைச் சேர்ந்த ஒரு பெண் முன்பு சாதனை படைத்திருந்தார். அவரது சாதனையை ஹேமலதா முறியடித்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார்.

இந்தச் சாதனையை முடித்ததும் அவர் களைப்பின் காரணமாக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஹேமலதா, திருச்சி பாரதிதாசன் பல்லைக்கழகத்தில் பரதநாட்டியக் கலையில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வருண்காந்திக்கு திருமணம்



திருமணம் இந்த ஆண்டிலேயே விரைவில் நடைபெறும் என அவருடைய தாயார் மேனகா காந்தி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆன்லோ தொகுதி எம்.பி.யான மேனகா நேற்று முன்தினம் அவருடைய தொகுதிக்கு வந்திருந்தார். அப்போது இந்தத் தகவலை நிருபர் களிடம் கூறினார்.

(லக்னோ)

இந்திரா காந்தியின் இளைய பேரனும் பா.ஜனதாக் கட்சியின் இளம் எம்.பி.யுமான வருண்காந்திக்கும் வங்காளத்தைச் சேர்ந்த யாமினி என்ற பெண்ணுக்கும் திருமணம் நடைபெறவுள்ளதாக வருண்காந்தியின் தாயார் மேனகா காந்தி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சய்காந்தி மற்றும் பா. ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவரான மேனகா காந்தி ஆகிய இருவருடைய மகன் வருண் காந்தி.

தற்போது பா.ஜனதாக் கட்சியின் இளம் தலைவர்களில் ஒருவராகவும் உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபிட் தொகுதியின் எம்.பி.யாகவும் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த வங்காளி பெண் யாமினி என்பவரை வருண்காந்தி திருமணம் செய்ய இருக்கிறார். தற்போது 30 வயதாகும் வருண்காந்தியின் திருமணம் இந்த ஆண்டிலேயே விரைவில் நடைபெறும் என அவருடைய தாயார் மேனகா காந்தி நேற்று முன்தினம் தெரிவித்தார்.


மேலும் வருண்காந்தியின் திருமண விழாவுக்கு சோனியா, ராகுல் உட்பட இந்திரா காந்தியின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் அழைப்போம் என்றும் மேனகா தெரிவித்தார்.

மேனகா குடும்பத்தினருக்கும் இந்திரா காந்தியின் மூத்தமகனும், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி குடும்பத்தினருடன் சுமுக உறவு கிடையாது. எனினும் கடந்த 1997 ஆம் ஆண்டு தனது பெரியப்பா மகள் பிரியங்கா(ராகுல்காந்தியின் சகோதரி) திருமணத்தில் வருண்காந்தி கலந்து கொண்டார். வருண்காந்தியின் பெரியப்பா ராஜீவ் காந்தியின் மகனும் அமேதி தொகுதி எம். பி. மற்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ராகுலுக்கு வருண்காந்தியை விட வயது அதிகம்.

எனினும் திருமணம் பற்றி கேள்விக ளை எழுப்பினாலே அதை ராகுல் காந்தி தவிர்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தமிழக மீனவர்களின் பிரச்சினையில் மத்திய அரசுக்கு அக்கறையில்லை

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு



(தூத்துக்குடி)

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுவரும் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு அக்கறை இல்லாமல் இருப்பதாக உலகத்தமிழர் கூட்டமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் 500 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து செயற்பட முடியாத நிலையில் உள்ளதாகவும் கூறினார்.

இது குறித்து மத்திய அரசு அக் கறை இல்லாமல் இருப்பதாகவும், கடலில் எல்லை தாண்டுவதால் தங்களால் எது வும் செய்ய முடிய வில்லை என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளதாகவும் நெடுமாறன் குறிப்பிட்டார். (ஸ்ரீ)



தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் நடிகர் முரளிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் கலந்து கொண்ட நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரமுகர்கள் .



51ஆவது படைப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்குதலும் மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வும் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.இதில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ,கோழிக்குஞ்சு வழங்குவதையும் 51ஆவது படைப்பிரிவுத் தளபதி மேஜர் பலகல்ல மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வர்களையும் படங்களில் காணலாம்.

# இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவி; முன்னாள் அணித் தலைவர் கங்குலி விருப்பம்



(புதுடில்லி)

இந்திய அணியின் பயிற்சியாளராக விருப்பம் உள்ளது என முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள் ளார்.

இந்திய அணியின் வெற்றித் தலைவ ராக விளங்கியவர் சௌரவ் கங்குலி. கடந்த 2008 இல் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெற்ற இவர், இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) இருபது-20 தொடரில் கொல்கத்தா நைட் டைர்ஸ் அணியின் தலைவராகவுள்ளார்.

தற்போது இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் வரும் ஒக்டோபர் முதலாம் திகதி மொகாலியில் ஆரம்பமாகின்றது. இத் தொடர் குறித்துக் கங்குலி கூறியதாவது,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றத் துடுப்பாட்டத்தில் சாதிக்க வேண்டும். சகீர்கான், ஹர்பஜன் உள்ளிட்டோர் அணிக்குத் திரும்பியிருப்பது பந்து வீச்சில் பலத்தை அதிகரித்துள்ளது.

அதேவேளையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகத் துடுப்பாட்டத்தில் முழுத் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் எளிதில் வெற்றி பெறலாம்.

பொதுவாக இந்திய மைதானங்கள் சுழற்பந்து வீச்சுக்குக் கைகொடுக்கும். இருப்பினும் பெங்களூரில் நடக்கவுள்ள 2-வது டெஸ்டின் ஆரம்பத்தில் சுழற்பந்து வீச்சு கை கொடுக்காது.

ஆனால் மொகாலி டெஸ்டில் சுழல் பந்து வீச்சு அதிகம் ஒத்துழைக்கும். எனவே ஹர்பஜன் இத் தொடரில் சாதிக்க அதிக வாய்ப்புள்ளது.

இந்திய அணியில் சுரேஸ் ரெய்னா, புஜாரா, முரளிவிஜய் உள்ளிட்ட இளம் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதனை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் இந்திய அணியில் நீடிக்கலாம். உள்ளூர்ப் போட்டியில் விளையாடிய அனுபவம் புஜாராகவுக்குக் கைகொடுக்கும்.

அடுத்தாண்டு நடக்கவுள்ள 4-வது ஐ.பி. எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் குறித்த விதிமுறை, நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் கூறியதுபோல சிக்கலாகவுள்ளது.

சிறந்த அணியை உருவாக்கக் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு அணியினரும் கடுமையாக உழைத்துள்ளனர். இருப்பினும் இது அணி நிர்வாகத்தின் பொறுப்பு என்பதால் முடிவு அவர்கள் கையில்தான் உள்ளது.

சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பாகிஸ்தான் வீரர்கள் மட்டும் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை. உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள வீரர்களும் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு துணைபுரியும் சூதாட்ட முகவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இந்திய அணியின் பயிற்சியாளராக விருப்பம் உள்ளது.

வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் முழு மனதுடன் இதனை ஏற்றுக் கொண்டு சிறப்பாகச் செயற்படுவேன் என நம்புகின்றேன்.

ஏனெனில் இந்திய அணியுடன் இது போன்று ஏதாவது தொடர்பு வைத்துக் கொள்வது மிகப் பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். இவ்வாறு கங்குலி கூறினார்.

## என்னைக் கட்டாயப்படுத்தி சூதாட்டத்தில் ஈடுபடுத்தியவர் பட்

### முகமெட் அமீர் முறைப்பாடு



கிரிக்கெட் சூதாட்டத்திற்குள் என்னைக் கட்டாயப்படுத்தி இழுத்து விட்டது அணித் தலைவர் சல்மான் பட்டும் பந்து வீச்சாளர் முகமெட் ஆஸிப்புந்தான் என்று கூறியுள்ளார் பந்து வீச்சாளர் முகமொட் அமீர்.

இது குறித்துப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் நடந்த அனைத்தையும் ஒன்றும் விடாமல் கூறிவிட்டாராம் அமீர்.


வேண்டுமென்றே தன்னை நோ போல் போடுமாறு வற்புறுத்தியவர் அணித் தலைவர் சல்மான் பட்தான் என்று கூறியுள்ள அமீர், அணியின் மூத்தவரான பட்டை மீறித் தன்னால் செயற்பட முடியவில்லை என்று கூறியுள்ளார்.

பட் போல அணியின் பிற மூத்தவர்களும் கூட இதுபோல் கட்டாயப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமீரின் இந்தப் புதிய வாக்குமூலத்தைத் தொடர்ந்து அவரை மீண்டும் விசாரிக்க ஸ்கொட்லாந்து யாட்டுப் பொலிஸார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது ஸ்பாட் பிக்ஸிங் செய்ததாகப் பிடிபட்டு அணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் சல்மான்பட், அமீர், ஆஸிப் ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண வைத்தியசாலைகளின் அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளினதும் தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாட்டில் கொழும்பில் அமைந்துள்ள சுகாதாரஅமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இவ் உயர்மட்டக் கலந்துரையாடலின் போது யாழ். போதனா வைத்தியசாலைக்கென சிற்றூழியர்களை நியமித்தல், சுத்திகரிப்புச் சேவையின் குறைபாடுகள், சமையலறைக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பாத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல், சமையலறையில் விறகு உபயோகிப்பதைத் தவிர்த்து எரிவாயு பயன்படுத்துதல், பராமரிப்பு பகுதி ஒன்றை ஏற்படுத்துதல், வெளிநோயாளர் பகுதியை நோயாளர்களது வசதி கருதி விரிவாக்குதல்,

விடுதி எழுதுநர்களுக்கான நிரந்தர நியமனங்களைப் பெற்றுக் கொள்ளல், வைத்தியசாலையில் பழைய பொருட்களை அகற்றுதல், தாதி உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை, விடுதி வசதி வைத்தியசாலையின் மேலதிக தேவைகளுக்கான காணி வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்,

அதிகாரிகளுக்கான வாகன வசதிகள், தாதிய பயிற்சிக் கல்லூரியின் தேவைகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் ஏனைய வைத்தியசாலைகளில் நிலவும் தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மைதிரிபால சிறிசேன, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள், யாழ்.வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி பவானி, வைத்தியகலாநிதி ரவிராஜ், தாதிய சங்கப் பிரதிநிதிகள், தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர், மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச-5)

# சிம்பாவே திரில் வெற்றி; அயர்லாந்து ஏமாற்றம்



(ஹராரே)

அயர்லாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் சிம்பாவே அணி கடைசிப் பந்தில் திரில் வெற்றி பெற்றது.

சிம்பாவேக்குச் சென்றுள்ள அயர்லாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றது. முதல் போட்டி ஹராரேவில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாவே அணித் தலைவர் சிகும்புரா, களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

### வில்சன் அரைச் சதம்

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்குத் தலைவர் போர்டர்பீல் (3), ஸ்டிர்லிங் (17), நியால், ஓபிரையன் (0), கெவின் ஓபிரையன் (2) உள்ளிட்ட முதல் வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றமளித்தனர்.

அடுத்து வந்த ஒயிட்(47), வில்சன் (69), மூனே (22), ஜோன்ரன் (23) கைகெடுத்தனர்.

இதன்மூலம் அயர்லாந்து அணி 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

சிம்பாவே அணி சார்பில் ரெயின்ஸ்போர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### தைபு அபாரம்

சுலப இலக்கை விரட்டிய சிம்பாவே அணிக்கு மசகட்சா (0) மோசமான ஆரம்பம் கொடுத்தார். அடுத்து வந்த பிரண்டன் ரெய்லர் (27) ஆறுதல் அளித்தார்.

பின்னர் அபாரமாக ஆடிய தைபு (62) நம்பிக்கையளித்தார்.நடுத்தர வரிசையில் வந்த எர்வின் (23), கோவன்டரி (27), அணித் தலைவர் சிகும்புரா (41) கைகொடுத்தனர்.

### திரில் வெற்றி

சிம்பாவே அணியின் வெற்றிக்கு கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் தேவைப்பட்டது. இந்நிலையில் ரெயின்ஸ்போர்டு ஒரு இமாலய சிக்ஸர் அடிக்க 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் சிம்பாவே அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவது போட்டி ஹராரேவில் இன்று நடக்கின்றது.

# தப்பிப்பதற்காக...

சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான செல்லத்துரை ஜெகன் (வயது 35) என்ற லொறி சாரதியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் தனியார் நிறுவனம் ஒன்றின் லொறி மணற்காடு பிரதேசத்தில் மணல் ஏற்றுவதற்காக சென்று கொண்டிருந்தபோது வல்லை வெளியில் புனரமைக்கப்படும் பாலத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதையில் பயணித்தவேளை குடைசாய்ந்து கடலுக்குள் பாய்ந்தது.

லொறி குடைசாய்ந்த போது தப்பிப்பதற்காக லொறிச் சாரதி லொறியிலிருந்து பாய்ந்துள்ளார். எனினும் சாரதியின் மீது லொறி குடைசாய்ந்தது. இதனால் சாரதி நசியுண்டு அவ்விடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் மரண விசாரணைகளின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5,24,52)

# தலைமைப்பதவியில்...

வத்தை கையளிக்க வேண்டும் என தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் தென்மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொண்டால், கட்சியை முன்னெடுத்துச் செல்ல சகலரது ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பதவிகளில் யார் நியமிக்கப்பட வேண்டும் எனவும் அது சம்மந்தமாக கருத்துக்களை முன்வைத்துள்ளதாகவும் குணரத்ன மேலும் கூறியுள்ளார். (ச-3,5)

# வெளிநாடு சென்ற தேர்...

கட்சிப் பதிவுக்காக மொத்தமாக 60 கட்சிகள் விண்ணப்பித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. 2009ஆம் ஆண்டு வாக்காளர் டாப்பின் இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல் ஆணையாளர் நிர்ணயிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உடல் நலக் குறைவு மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக தேர்தல் ஆணையாளர் பதவியை ராஜினாமா செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் முயற்சித்த போதிலும் அரசியல் சாசனத்தில் அதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பொன்சேகா ஆஜரா...

உறுப்பினர்கள் வெள்ளைக் கொடியுடன் வந்தபோது பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பேரில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஆங்கில பத்திரிகை யொன்றிற்கு அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா பேட்டிகொடுத்த தாக கூறப்படும் கருத்து தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையே இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை பிரதான சந்தேகநபரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் போன்சேகா சுகவீனம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரை கடற்படை வைத்தியர்கள் வைத்திய பரிசோதனை செய்துள்ளதா கவும் சரத் பொன்சேகா தொடர்பான வைத்திய அறிக்கை கிடைத்தவுடன் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவது குறித்து தீர்மானிக்கப் படுமெனவும் இராணுவ நீதி அதிகாரி கருணாரட்ன கொழும்பு மேல் நீதிமன்றிற்கு நேற்று அறிவித்துள்ளார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை சரத் பொன்சேகாவுக்கு எதிராக சாட்சிமளிக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா உள்ளிட்டோர் நீதிமன்றத்துக்கு வருகை தந்தனர்.

இவர்களில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஆகியோரை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் இன்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது முன்னாள் இராணுவத்தளபதியை பேட்டி கண்டு வெள்ளைக்கொடி சம்பவம் பத்திரிகையில் பிரசுரமாக வழிசெய்த ஊடகவியலாளரும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

நேற்றைய வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாஜ ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் வருகை தந்ததினால் மேல் நீதிமன்றத்தை சுற்றியும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ச-3,5)

# சுண்ணக்கல் அகழ்வை...

மத்திய மகாவித்தியாலயத்தை 20 ஆண்டுகளின்பின் சொந்த இடத்தில் உத்தியோக பூர்வமாக மீள ஆரம்பித்து வைப்பார்.

அத்துடன் கீரிமலை பகுதிக்குச் சென்று சுண்ணக்கல் சட்டவிரோதமாக அகழப்படுவது குறித்து ஆராய்ந்து அதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்.

இது தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த விசேட கோரிக்கையிலேயே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதனை மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து திருநெல்வேலி விவசாய திணைக்களத்திற்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள் குழுவினர் யாழ்.விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்களை வழங்கி வைப்பர்.

அத்துடன் அரியாலை கிழக்கிற்கு விஜயம் செய்யும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அங்கு மக்கள் மீள்குடியேற்றப்படுவதற்கு பின்னர் இம்முறை மேற்கொள்ளப்படும் பெரும்போக நெற்செய்கைக்கான ஏர்பூட்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷவுடன்பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் மு.சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்டின் அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்வார்கள். இவ்வாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ச-5)

# முன்னாள் புலிப்போராளிகள்...

வேளைகளில் இலங்கை திகழக் கூடுமென வும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளதாவது,

உதவி வழங்கும் நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் மனித உரிமையை மேம்படுத்துமாறு இலங்கையைக் கோர வேண்டும். என்ன காரணத்திற்காக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகின்றது என அரசு பதிலளிக்க வேண்டும்.

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் பாரிய சட்ட இடைவெளியொன்று காணப்படுகிறது.

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்தல் மட்டுமே உதவி வழங்கும் நன்கொடையாளர்கள் இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென சர்வதேச நீதவான்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறெனினும் இடம் பெயர் மக்களை முகாம்களிலிருந்து விடுவித்தல் மற்றும் 565 சிறுவர் போராளிகளை விடுத்தல் போன்ற நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியதென தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளும் சரணடைந்தவர்களும் ஒரு சட்டரீதியான கருஞ்சூன்யத்தை எதிர்நோக்குவதாகக் கூறும் இந்த அமைப்பு புனர்வாழ்வு முயற்சிகளுக்கான சர்வதேச உதவி, இந்த நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்கள் மற்றும் தரவுகளின் படியே எடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே தரப்படவேண்டும் என்று கூறுகிறது.

இவ்வாறு எந்த நிபந்தனைகளும் இல்லாமல் சர்வதேச உதவி தரப்பட்டால் அது நியாயமற்ற தடுப்பு நடவடிக்கைகளில் சர்வதேச சமூகமும் ஒத்திசைவாகச் செல்லும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று இந்த அமைப்புக் கூறுகிறது.

இலங்கையில் இவ்வாறான தடுப்புக்காவல் கைதிகள் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழும் செய்யப்படுவதை சுட்டிக்காட்டும் இந்த அமைப்பு, இந்த சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடு தலைப் புலி போராளிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்ற பேரில் இரண்டு ஆண்டுகள் வரை எந்தவொரு குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படாமல் நிர்வாகத்தால் தடுத்துவைக்கப்படுவது அவர்களுக்கு தனிப்பட்ட முறை யிலோ அல்லது கூட்டாகவோ விதிக்கப்படும் விசாரணையில்லாத தண்டனை என்று வர்ணிக்கிறது.

அவர்கள் செய்ததாகக் கூறப்படும் இந்த கிரிமினல் குற்றங்களுக்காக இவ்வாறு மறைமுகமாக விதிக்கப்படும் தடுப்புக்காவல் தண்டனையை தவிர விசாரணைகள் மற்றும் கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் தொடங்கப்பட்டால் அவர்களுக்கு இரண்டாவது முறையும் மற்றொரு தண்டனையும் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறை அவர்கள் எதிர் நோக்கிறார்கள் என்று இந்த அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

### பரிந்துரைகள்

இலங்கை அரசு அவசரகாலச்சட்டங்களை முடிபுக்குக் கொண்டு வருவது, புனர்வாழ்வு விதிமுறைகளை வகுப்பது, சண்டையில் ஈடுபட்டவர்களை முறையாக குற்றச்சாட்டி வழக்குத் தொடுப்பது அல்லது அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது பயங்கரவாத தடுப்புச் சட்டங்களை மறு பரிசீலனை செய்வது அது சர்வதேச சட்டத்துக்கு ஒவ்வாத பிரிவுகளை சீர் திருத்துவது அல்லது விலக்கிக் கொள்வது ஆகியவைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

மேலும் சிறார்கள் இந்த தடுப்புக்காவல் முகாம்களில் தடுத்துவைக்கப்படாமல் இருப்பதை அரசு உறுதி செய்யவேண்டும் என்றும் அது கோரியிருக்கிறது.

ஐ.நா. மன்றமும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளும் இந்த விடயத்தில் சர்வதேச சட்டம் மற்றும் தரவுகளை ஒத்த இலங்கைக்கான சட்டவடிவமைப்பு ஒன்றை உருவாக்க தொழில் நுட்ப உதவியை வழங்க வேண்டும். ஐ.நா. மன்றமும் இந்த சட்டவடிவமைப்பு ஏற்படுத்தப்படும் வரை இந்த முகாம்களுக்கு இலங்கை அரசின் எந்தவொரு நடவடிக்கையையும் ஆதரிக்கக் கூடாது என்றும் இந்த அமைப்பு கூறியிருக்கிறது.

இதேவேளை 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இன்னமும் முழுமையாக ஓயவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளை முழுமையாக இல்லாதொழிக்கும் வரையில் அவசரகாலச்சட்டத்தை தளர்த்த முடியாதென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தீவிரவாத அமைப்புக்களுக்கும் எதிரான யுத்தங்களின் போது பின்பற்றப்படும் சர்வதேச சட்டங்களில் மாற்றம் தேவை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் என்ன என சர்வதேச நீதவான்கள் ஆணைக்குழு கேள்வி எழுப்பியுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நியாயப்படுத்தும் அளவிற்கு இலங்கையில் தற்போது சூழ்நிலை மோசமாக அமையவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது. (ச-3,5)


NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd

கணனிகள் (ASSEMBLE PC), BRANDED கணனிகள் (HP), LAPTOPS (HP, DELL) மற்றும் அதன் உதிரிப்பாகங்கள், PRINTER, SCANNER அனைத்தும் எமது நிறுவனத்தில் மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.



PROCESSOR - 2.70 GHz
MOTHER BOARD - ASUS G31
RAM - KING 1GB
H.D.D - 500 GB
DVD WRITER - SAMSUNG
KEY.B/MOUSE - POWERLOGIC
UPS - POWER iii
MONITOR - HP COMPAQ



3 year warrnty

51900/-

கணனியை பெற்றுக் கொள்பவர்களுக்கு COMPUTER TABLE, HEAD PHONE என்பன இலவசமாக வழங்கப்படும்

எம்மிடம் Net Work சம்மந்தமான அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்

D LINK Router - 4900/- (3 year W) Free Head Phone
TP LINK Router - 4500/- (1 year W) Free Head Phone

எம்மிடம் ADSL Router கொள்வனவு செய்பவர்களுக்குஇலவச இணைப்புக்கள் செய்து தரப்படும்



NALIN information Technologies Pvt Ltd

195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974


# மாவிட்டபுரத்தில் குண்டு...

ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக படைத்தரப்புத்தகவல்கள் தெரிவித்தன. காயமடைந்தவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# வலி.வடக்கு உயர்பாது...

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில், வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியேற்றுவதற்கு விரைவில் அனுமதிக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். எனினும் அப்பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றப்பட்டதற்கான உறுதிச்சான்றிதழ் இதுவரை வழக்கப்படவில்லை.

இதனால் வலி. வடக்கு உயர்பாதுகாப்பு பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றும் பணி தாமதமாகும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இதேவேளை இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பசில் ராஜபக்ஷ உயர் பாதுகாப்பு வலயத்துக்குச் செல்லும் அவர் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வார் என குறிப்பிடப்படுகிறது. (ச-5)

# ஆயுதம் தேடும் பணி...

கொண்டு செல்வதற்கான வழிகள் ஏற்படுத்தப்படுகின்றது. மழை தொடங்கியுள்ளதால் குளத்திலிருந்து நீரை இறைக்கும் செயற்பாடு தாமதமாகுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை அப்பகுதியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-1)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.